# புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம்௵ ஜூன்௴ 18௳ திங்கட்கிழமை [ந. 252


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLII.

## ஜப்பானின் வலிமையும் பலஹீனமும்.

### தூரக்கிழக்கில் நேசதேச அலுவல்கள்.

ஜப்பானிய யுத்தம் திருப்திகரமாக நடைபெற்று வந்தாலும் இன்னும் அலுவல்கள் பிரமாதமாக இருக்கின்றன.

ஜப்பானிய ஆக்கிரமிப்பு நாடுகள் வழியாக நேசதேசத்தார்கள் ஊடுருவிச் சென்றதென்பது ஜப்பானுக்கு மிகவும் அபாயகரமானதென்றாலும் இது வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் வெடிவிமானங்களால் பலமாகத் தாக்கப்படுகிறது. ஆகிலும் ஜப்பான் அக்கிரமப் போரினால் சம்பாதித்த நாடுகளின் பெரும்பான்மை ஜப்பானிடமே இருந்துவருகின்றன.

ஜப்பானிய உள்நாட்டு வட்டாரமாகிய மஞ்சூரியா, கொரியா, வடக்கு சைனாவின் தொழிற்சாலை சக்தி மிகுதியானது. ஆகிலும் நேசதேச கடற்படையும் விமானப்படையும் கடல மார்க்கங்களில் ஆதிக்கம் பெற்றுவிட்டதாலும், விமானத்தரை நடவடிக்கை மூலம் தரை மார்க்கமான போக்குவரத்துக்கு அபாயம் நேரிடுவதாலும் உற்பத்திப் பொருள்களை சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த தூரதேசங்களுக்குக் கொண்டுபோவது சந்தேகிக்கக்கூடியதாக இருக்கும்.

1942-ம் வருஷம் வேனிற் காலமத்தியில் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் ராணுவ சக்தி மேற்கில் பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் மத்தியிலுள்ள மலைக்கும் மேற்கிலிருந்து மலேயா தீபகற்பத்துக்கு வரும் கடல் மார்க்கத்திலுள்ள தீவு வரிசைகள் வரையிலும் பறவியிருந்தது. இவைகள்தான் அந்தமான், நிகோபார், சுமாத்ராத் தீவுகள். இந்தத் தளங்களுக்குப்பின் ஜப்பான், பர்மா, ஸியாம், மலேயா, பிரெஞ்சு இந்தோ-சைனா முதலிய நாடுகளை ஆக்கிரமித்திருந்தது அல்லது அவைகளில் ஆதிக்கம் பெற்றிருந்தது. இந்த நாடுகள் கிழக்கு ஆசியாவிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களுக்கு மதில் சுவர் போலிருந்து சுதந்திர சைனாவை முற்றுகை செய்ய உதவி செய்துவந்தன.

ஆறுமாதப் போரில் பர்மா சுத்தி செய்யப்பட்டது. 14வது சேனைக்கும் 15வது இந்தியப்படைக்கும் ரெங்கூன் நகரமும் துறைமுகமும் கிடைத்துவிட்டன. வெகு சீக்கிரத்தில் பிரிடிஷ் படைகள் தெற்கு பர்மாவின் எஞ்சிய பாகங்களையும் பிடித்துவிடும். சால்வீன் நதியைத் தாண்டியுள்ள ஸியாமின் எல்லைச் சரகத்தையும் அது அடைந்துவிடும். இவ்விதமாக

தென் கிழக்கு ஆசியாவில் தரையிலுள்ள ஜப்பானிய தற்காப்புகளின் முக்கிய பாகங்கள் வீழ்ச்சி பெற்றுவிட்டன.

கடற் தற்காப்புகளில் எதிரிக்குள்ள பிடிப்புக்கும் அபாயம் ஏற்பட்டுவிட்டது. அந்தமான் தீவுகளில் ஜப்பானியர்கள் இருந்தபோதிலும் ரெங்கூனைப் பிடித்து எதிரி கடல் மார்க்கமாகத் தப்பி ஓடமுடியாமல் தங்கும் வேலையில் படைகளை இறக்குவதற்காக மார்டாபான் வளை குடாவில் பிரிடிஷ் கிழக்கு இந்தீஸ் கடற்படை நடமாடியதைத் தடுக்கமுடியவில்லை. சுமாத்ராவும் வடக்கிலுள்ள தீவுகளும் சென்ற சில மாதங்களில் கிழக்கு இந்தீஸ் கடற்படையின் தாக்குதல் பளுவை உணர்ந்திருக்கின்றன. இந்தத் தீவுகளை ஜப்பான் உபயோகமுள்ளதாக வைத்திருப்பதென்பது ஜப்பானிடம் உள்ள கடற்படையைப் பொருத்ததாகும். அவ்வித கடற்படை இப்பொழுது ஜப்பானிடம் இல்லை.

பர்மாவிலுள்ள ஸ்தானங்களை இழப்பது நிச்சயமென்று தோன்றியவுடன் ஜப்பானியர்கள் தென்கிழக்கு ஆசியாவில் அவர்களுக்குள்ள ஸ்தானங்களை பலப்படுத்த முடிவு செய்தார்கள். அதற்காக விசி சர்க்காரிடம் விசுவாசம் கொண்டிருந்த பிரெஞ்சு இந்தோ-சைனாவை ஜப்பான் ஆக்கிரமித்தது.

தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானியரிடம் பாக்கியுள்ள நாடுகளை ஒன்றோடொன்றும், ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் மற்ற நாடுகளுடனும் சேர்க்கும் மிகவும் உபயோகமுள்ள ஒரு போக்குவரவு திட்டம் இருந்துவருகிறது. சைனா எல்லையிலுள்ள லாங்க்ஸனுக்கும், ஹானாயிக்கும், சைகோனுக்கும், ஒரு பக்கா இருப்புப்பாதை செல்லுகிறது. அதன்பின் நதி, இருப்புப் பாதை மூலம் போக்குவரத்து பாங்காக்குக்குச் செல்லுகிறது. அங்கிருந்து நேசதேச யுத்தக் கைதிகள் தயாரித்த இருப்புப்பாதை மலேயா தீபகற்பத்திலுள்ள இருப்புப்பாதையோடு சேருகிறது. இந்தப் போக்குவரத்து மார்க்கம் ஜப்பானின் பலமான கண்காணிப்புக்குட் பட்டிருக்கிறது. ஆகிலும் அது ஆகாயத்திலிருந்தும், கடலிலிருந்தும் தாக்கக்கூடியதாக இருக்கிறது.

கடல் மூலமாகவும் ஆகாய மூலமாகவும் கடல் மார்க்கங்கள் நேசதேசத்தாரால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதினால் மலேயா, ஸியாம், இந்தோ-சைனாவிலுள்ள பெரிய துறைமுகங்கள் உபயோகமுள்ளதாயிருக்குமென்பது சந்தேகாஸ்பதமானது. ஆகிலும் அவைகளில் வெகு தூரத்திலிருந்து வரும் சில சாமான் கப்பல்களும் கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பல்களும் தங்கிச் செல்லுகின்றன.

இந்த பிரதேசங்களில் உணவுப்பொருள், எண்ணெய் ஸப்ளையில் யாதொரு குறைவும் கிடையாது. இந்த மூன்று தேசங்களிலும் விசாலமான செழிப்பான பிரதேசங்களிருக்கின்றன. ஜப்பான துருப்புகளின் போஷணைக்காக அவைகளை நம்பியிருக்கலாம். ஜப்பானியத் தீவுகளிலிருந்தும், அல்லது மஞ்சூரியாவிலும் கொரியாவிலும் உள்ள தொழிற்சாலைகளிலிருந்தும் உற்பத்திப் பொருள்களை இந்த நாடுகளுக்குக் கொண்டுபோகவேண்டுமென்றால் ஜப்பான் கடல் மார்க்கங்களை நம்பியிருக்கவேண்டும். அங்கு அபாயம் அதிகரித்திருக்கிறபடியால் கப்பல்கள் துணிவுகரமான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அல்லது சைனா வழியாகச் செல்லும் பிரதேச வழியை உபயோகப்படுத்தவேண்டும். அங்குள்ள இருப்புப் பாதை அமைப்புகளை பின்வாங்கிய சீனர்கள் ஒரு சிறிது அழித்திருக்கிறார்கள். அவைகளை அமெரிக்க 14வது விமானப்படை அடிக்கடி தாக்கிவருகிறது,

ஆஸ்திரேலியர்கள் பலமாக எதிர்த்துப் போராடியதினால் ஜப்பானியர்கள் கிழக்கிந்தீஸ் தீவுகளின் ஒரு பகுதியில் அதாவது தென்கிழக்கு நியூகினியாவின் ஒரு சிறிய பிராந்தியத்தில் சமாளித்து நிறுத்தப்பட்டார்கள். இந்த பிரதேசத்திலிருந்து ஆஸ்திரேலியப் படைகள் நியூகினியாவைத் திருப்பிப் பிடித்ததுமட்டுமில்லாமல் தீவின் வடமேற்குப் பாதியில் ஜப்பானியர்களை அடைத்தும், அதற்கு வடக்கிலுள்ள தீவுக்கூட்டங்களை ஆக்கிரமித்ததன் மூலமாக முற்றுகையும் செய்துவிட்டார்கள்.

கிழக்கு இந்தீஸ் தீவைச் சேர்ந்த மற்றத் தீவுகளும், முக்கியமான ஆஸ்திரேலிய கடற் கரைக்கருகிலுள்ள டிமாரும், புளோர்ஸ் தீவுகளும், ஜாவாவும், போர்னியோவும், ஸெலிபிஸும் இன்னும் ஜப்பான் வசமிருந்து வருகின்றன. இங்கு இப்பொழுதுதான் ஜப்பானியர்கள் நேசதேசத்தாரின் நேர்முகமான தாக்குதலின பளுவை உணர்ந்து வருகிறார்கள்.

ஆனால் மற்ற தூரத்திலுள்ள முனைகளில் அவர்கள் தாக்குதலின் பளுவை வெகுகாலமாகச் உணர்ந்திருக்கிறார்கள். ஸாலமன்ஸ் தீவுகளிருந்து மாரியனாஸ் தீவுகளுக்கு அமெரிக்கப்படை

ஊடுருவிச் சென்றது, நியூகினியாவின் பெரும் பாகத்தை ஆஸ்திரேலியர்கள் திரும்பிப் பிடித்தது, பிலிப்பைன்ஸ் தீவுகளின் பெரும்பாகம் திரும்பிப் பிடிக்கப்பட்டது, அங்கு விமான தளங்கள் கட்டப்பட்டது, இப்பொழுது ஜப்பானுக்குத் தெற்கிலுள்ள ரையுகியூஸ் தீவுகளை நேசதேச கடற்படையும் தரைப்படையும் தாக்குவது, போன்ற நடவடிக்கைகள் கிழக்கு இந்தியத் தீவுகளுக்கு ஜப்பான் இனி கடல் மார்க்கமாகச் செல்லமுடியாது என்பதை பலப் படுத்துகின்றன.

பிலிப்பைன்ஸை அமெரிக்கர்கள் ஆக்கிரமிப்பது பூர்த்தியாகும் பொழுதும் தீவுகளிலுள்ள விமானதளங்கள் அபிவிருத்தி செய்யப்படும் பொழுதும் சீனக்கடலிலுள்ள கப்பல்களை விமானமூலம் கண்காணிப்புச் செய்வதும் வரவர திறம்பட நடைபெற்றுவருகிறது. இந்த நிலைமையில் சமீபநாடுகளிலிருந்து கிடைக்கும் ஸப்ளைகள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. போர்னியோ, சுமத்ரா, ஜாவாவிலுள்ள எண்ணெய் நிலயங்களைத் தாக்கியதும் போர்னியோ கடற்கரைக்கருகில் தாரகானில் ஆஸ்திரேலிய கமாண்டோப்படைத் தாக்கியதும் நேசதேசத்தார்கள் இந்த உண்மையை அறிந்துவிட்டார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கிழக்கிந்தீஸ் தீவுகளின் முக்கிய பாகங்களில் நியூகினியாவில் இருந்ததைவிட தற்காப்பு செய்யவும் நீண்டகால போருக்குத் தேவைப்படும் ஸப்ளைகளைப் பெறவும் ஜப்பானுக்கு அதிக சௌகரியமிருக்கிறதென்று நாம் மதிக்கவேண்டும். நியூகினியாவிலும் ஜப்பானுக்கு நம்பிக்கைக் குறிய நிலமை மறைந்த பின்னும் ஜப்பான் வெகுகாலமாக எதிர்த்துப் போராடி வருகிறது.

பஸிபிக்கில் அவர்கள் துணிக்கப்பட்டிருந்தாலும், ஜப்பானியப் படைகள் தீவுக் கூட்டங்களின் பெரும் பகுதிகளில் ஏராளமாக இருந்து வருகின்றன. முக்கியமாக காரொலைன் தீவுகளிலும், மார்ஷல்ஸ் தீவின் பெரும் பாகத்திலும், மாரியனாஸ் தீவிலும், கடல் தளங்களும், விமான தளங்களும் ஜப்பானியர் வசமிருக்கின்றன, தாராவா, சைபான், ஐவோஜிமா, இப்பொழுது ஆகினாவாவில் நடைபெறும் போரின் கடுமையை கவனித்தால், பஸிபிக்கில் ஜப்பானிடம் எஞ்சியுள்ள ஸ்தானங்களிலிருந்து ஜப்பானியப் படைகளைத் துரத்தியடிக்குமுன் எவ்வளவு பலமாகப் போரை நடத்தவேண்டுமென்பது நன்கு விளங்கும். அந்த ஸ்தானங்களுக்கும் ஜப்பானுக்கும் போக்குவரத்து துணிக்கப்படுமுன் சர்ப்பராக்களையும், உதவிப் படைகளையும் கொண்டுவர அந்நாடுகளுக்குப் போதுமான அவகாசம் இருந்தது. அதற்குப் பிறகு உணவுப் பொருள்களுக்காக அவைகள் உள்நாட்டு ஐச்வர்யங்களைக் கூடுமானவரையில் உபயோகப்படுத்த வேண்டுமென்று தூண்டப்பட்டார்கள். ஜப்பானியர்கள் பஸிபிக்கிலுள்ள எந்த ஸ்தானத்தையும் கடும் போரன்னியில் கைவிட்டுவிடுவார்கள் என்று நினைப்பதற்கு யாதொரு ஹேஷ்யமும் காணப்படவில்லை.

1937-ம் வருஷ அக்கிரமப் போருக்குப்பின் நதிகளையும் முக்கியமான நகரங்களையும் ஆக்கிரமித்ததனால் சீனாவின் ராணுவ, ராஜிய வீழ்ச்சி ஏற்படுமென்று ஜப்பான் நம்பியிருந்தது. அவ்விதம் நேராத பின் ஜப்பான் சீனாவில் சுறுசுறுப்பான, விரிவான ராணுவ நடவடிக்கைகளில் படைகளை ஈடுபடுத்தாமல் பத்திரப்படுத்தி வந்தது. கால கிரமத்தில் சைனாவின் ராஜீய, பொருளாதார நிலமை சீர் கெட்டுவருவதையும் ஜப்பான் கவனித்து வந்தது.

பர்மா நடவடிக்கைகளினால் சைனாவின் முற்றுகைக்கு ஆபத்து ஏற்பட்டதினாலும், பஸிபிக்கின் குறுக்கே அமெரிக்கர்கள் முன்னேறி வந்ததினால் கடல் மார்க்கமாக தென் கிழக்கு ஆசியாவுக்குச் செல்லும் மார்க்கங்கள் சிரம சாத்யமாகிவிட்டதினாலும், சைனாவிலுள்ள பிடிப்பை பலப்படுத்திக்கொள்ள 1944-ம் வருஷத்தில் ஜப்பான் சைனாவில் ஒரு பெரிய போரைத் துவக்கிற்று. இதன் பயனாக சைனாவிலுள்ள பெரும்பான்மையான போக்குவரத்துகள் ஜப்பானிய வசமாகிவிட்டன. சிகியாங், யாங்க்டிஸ்கியாங், ஹுவாங்ஹோ என்ற நதிப் பள்ளத்தாக்குகள் ஜப்பானிய வசமிருந்து வருகின்றன. அதைத் தவிர சைனாவில் வடக்கிலுள்ள மஞ்சூரியாவிலிருந்து தெற்கிலுள்ள காண்டன் வரைக்கும், ஷாங்கேயிலிருந்து கியாங்ஸி மாகாணம் வரைக்கும், செங்கியாங்கிலிருந்து இந்தோ-சைனா எல்லைச் சரகம் வரைக்கும் உள்ள இருப்புப் பாதைகள் ஜப்பானியர் வசமிருந்து வருகின்றன. சீனக் கடற்கரை பூராவும், பூசௌவைத் தவிர பாக்கித் துறைமுகங்களும் ஜபபான் வசமிருக்கின்றன. வடக்கில் மஞ்சூரியாவில் மிகவும் சக்தி வாய்ந்த தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளின் உதவி கொண்டு சைனாவிலுள்ள சேனைகளுக்குப் போதுமான தளவாடங்களை அனுப்பிவிடலாமென்று ஜப்பான் நம்பியிருக்கிறது. ஆகிலும் பர்மா மூலமாக சீனாவுக்குத் தரை

மார்க்கம் திறக்கப்பட்டுவிட்டதால் மேற்கு வல்லரசுகளிடமிருந்து ஜப்பானின் எதிரியான சீனாவுக்கு உதவி மிகுதியாக வந்துகொண்டிருக்கிறது.

சைனாவில் ஜப்பானுக்கு படை பலமும், போதுமான உணவு ஸப்ளையும், தொழிற்சாலை தளங்களும் ஜப்பானிலிருந்து உதவியன்னியில் போரை நடத்தும் சக்தியும், ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குப் படைகளை வெகு சீக்கிரமாகக் கொண்டு போக போக்குவரத்து மார்க்கங்களும் இருக்கின்றன. பஸிபிக் தீவுகளை சுத்தி செய்வதற்கான துடைப்பு வேலையிலுள்ள சிரமங்களைவிட சீனாவில் நேசதேசத்தார்களுக்கு அதிக சிரமம் ஏற்படக்கூடும். கிழக்கு ஆசியாவில் மிகப்பெரிய நாட்டினிடமிருந்து விசாலமான தேசங்களை விடுவிப்பதற்கு ஏராளமான படைகளையும், சகலவிதமான யுத்த முஸ்தீப்புகளையும் உபயோகப்படுத்தி பிரம்மாண்டமான போர்களை நடத்தவேண்டியிருக்கும். இந்தப் போர்களில் மேற்கு வல்லரசுகள் அதிகமான பங்கெடுத்துக்கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அலூஷியன் தீவுகளிலும், மாரியனாஸ் தீவுகளிலும், ரையுகியூஸிலும் இப்பொழுது நடவடிக்கையைத் துவக்கி ஜப்பானை நேசதேசத்தார்கள் சமீபித்து வருகிறார்களென்பது, ஜப்பானியப் போரில் இறுதி நடவடிக்கையாகவாவது அல்லது அதற்கு முற்போக்காகவாவது ஜப்பானில் படையெடுப்பு ஏற்படவேண்டுமென்பதை ஞாபகப்படுத்துகிறது. அங்கு உணவுப் பொருள் போதுமான அளவுள்ளதும், சக்தி வாய்ந்த தொழிற்சாலைகளின் உதவியும் பெற்ற 8,00,00,000 ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் மேற்கு வல்லரசுகளின் தாக்குதலை எதிர்பார்த்து நிற்கிறார்கள். நேசதேச வெடிகுண்டு வீச்சும் ராணுவ பிற்போக்குகளும் அவர்களின் மனஉறுதியைச் சற்றும் குலைத்துவிடவில்லை.

நியூ கினியா, பர்மா, பிலிப்பைன்ஸ், ஆகினாவா, மற்ற இடங்கள், முதலிய போரில் ஜப்பானியர்கள் காட்டிவரும் போர் வீரம் ஜப்பானில் எவ்வளவு தூரம் காணப்படுமென்பதைச் சொல்லுவது சாத்தியமில்லை. ஐரோப்பாவில் நேசதேசத்தார்கள் ஈடுபட்டிருப்பது போல் தூரக்கிழக்கிலும் அந்த வேலையைப் பூர்த்தி செய்யவேண்டுமானால் ஜப்பானை முறியடித்து அதை ஆக்கிரமிப்பது அத்யாவசியமானதென்பது நிச்சயம். ஜப்பானிய சாம்ராஜ்யத்திலுமுள்ள எல்லா ஜப்பானியப் படைகளையும் அழித்தால் தான் உலகம் முன்போல பத்திரமாகவும், மாசற்றும் இருந்து வரக்கூடும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 7—6—45 (வியாழக்கிழமை). | ஜப்பானியர்கள் பர்மாவில் இராவதிப் பகுதியிலிருந்து ஓட்டம் பிடித்தார்கள். |
| 10—6—45 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் ஜெனரல் ஈஸன்ஹவருக்கும் பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரிக்கும் கௌரவ அடையாளங்களை வழங்கினார்கள். |
| 12—6—45 (செவ்வாய்க்கிழமை). | ஆஸ்திரேலியர்கள் புருனி விரிகுடாவிலுள்ள மாராத் தீவைப் பிடித்தார்கள். |
| 13—6—45 (புதன்கிழமை). | ஆஸ்திரேலியப் படைகள் போர்னியோவின் மேற்குக் கடற்கரையில் இறங்கின. |
| | ஆகினாவாவில் ஜப்பானின் எதிர்ப்பு குலைந்தது. |
| 14—6—45 (வியாழக்கிழமை). | ஆஸ்திரேலியர்கள் போர்னியோ ஸுல்தானேட்டின் தலைநகரமான புருனேயை ஆக்கிரமித்தார்கள். |
| | வேவல் பிரபு இந்திய ராஜீய சீர்திருத்தங்களை பிரகடனம் செய்தார். |

## (B)-செய்திச் சுருக்கம்.

பஸிபிக்—

(1) ஆகினவா.—ஆகினவாவின் வடக்குப் பகுதியில் ஏற்பாடான ஜப்பானிய எதிர்ப்பு நின்றுவிட்டது. தெற்குக் கோடியில் 13 சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தில் போர் நடைபெறுகிறது.

(2) போர்னியோ.—ஆஸ்திரேலியப் படைகள் லாபூவான் தீவிலும், புருனே விரிகுடாவிலுள்ள புருக்டன், மாராவிலும், போர்னியோவின் மேற்குக் கரையிலும் இறங்கிவிட்டன. அவர்கள் லாபூவான் என்ற தலைநகரத்தையும் பிரிடிஷ் போர்னியோவின் வடமேற்கிலுள்ள பெரிய நகரமான புருனேயையும் பிடித்தார்கள்.

(3) ஸாலமன்ஸ்.—படைகள் போகன்வில்லிக்கு வடக்கிலுள்ள மாச்சின் விரிகுடாவிலும் இறங்கிவிட்டன.

(4) லூஸான் (பிலிப்பைன்ஸ்).—பாகா விரிகுடா பிடிபட்டது.

சைனா.—சீனப்படைகள் பூகியன் மாகாணத்திலுள்ள பூடிங்கையும், டாடாகியூஸையும், மேற்கு ஹூனானிலுள்ள இகுவஷாயியையும், நானிங்குக்குச் சமீபத்திலுள்ள லங்செளவையும், இஷானையும், பெயிஷாவோயையும், டெங்குமினையும், ஹோயூங்கையும் பிடித்தன. ஜப்பானியர்கள் இஷானைத் திருப்பிப் பிடித்தார்கள். லிம்பிங்கையும், சுங்சிங்பூவையும் பிடித்தார்கள்.

பர்மா.—தோங்கூ மாசி ரஸ்தா வழியாக முன்னேறிய நேசதேசப் படைகள் லெட்படானுக்கு வடகிழக்கிலுள்ள டான்பிங்கானைத் திரும்பிப் பிடித்துவிட்டார்கள்.

இராவதி நதியின் முகத்துவார பிரதேசத்தில் பாஸினுக்கருகில் பிரிடிஷ், இந்தியத் துருப்புகளிடம் 21 தனிப்பட்ட ஜப்பானியர்கள் தானாகவே சரணடைந்துவிட்டார்கள்.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**6—6—45.** (புதன்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் தற்காப்புகள்.—ஆகினவா (Okinawa), போர்னியோ (Borneo).

பர்மா (Burma).

கால நிலையை உத்தேசித்து, கட்டுப்பாடான விமான நடவடிக்கைகள் நடத்தப்பட்டன.

**7—6—45.** (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

தளவாட தொழிற்சாலைகள்.—ஓஸாகா (Osaka).

ரயில்வேப் பாலங்கள்.—சீனாவிலுள்ள மஞ்சள் நதியின் இருகரைகளிலும்.

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**8—6—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமானத் தொழிற்சாலைகள்.—நாகோயா (Nagoya), நாரு (Naruo), அகாஷி (Akashi).

ஜப்பானியத் தற்காப்புகள்.—ஆகினவா (Okinawa).

விமான தளம்.—ஹோன்ஷூ தீவிலுள்ள கானோய் (Kanoye).

**பர்மா (Burma).**

துருப்பு முகாம்கள்.—பிலின் (Bilin) தான்பாயா (Thanbaya).

**9—6—45** (சனிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—லபாவன் (Labuan), புருனெய் (Brunei).

**பர்மா (Burma).**

எதிரி துருப்புகள்.—கமாமங் (Kamamaung).

**10—6—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.—டோக்கியோ (Tokyo) விற்கருகில்.

இலக்குகள்.—யோகாஹாமா (Yokohama) துறைமுகம்.

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**11—6—45.** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—டோக்கியோ (Tokyo), யோகாஹாமா (Yokohama).

பர்மா (Burma).

ஜப்பானிய முகாம்கள்.—பெகு (Pegu)வின் கிழக்கு.

**12—6—45.** (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான தளம்.—க்யுஷூ த் தீவிலுள்ள கனோயா (Kanoya), குஷிரா (Kushira).

ரயில்வே ஜங்ஷன்கள்.—ஹெங்யாங் (Hengyang), லெயாங் (Leiyang).

பர்மா (Burma).

ஜப்பானிய முகாம்கள்.—சிட்டாங் (Sittang).

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**7—6—45.** (வியாழக்கிழமை) **to 13—6—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East.)

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ஐரோப்பா.** மிஸ்டர் சர்ச்சில் அவருடைய நாட்டிற்கும், சாம்ராஜ்யத்திற்கும் பேருதவி செய்திருக்கிறார் என்று நாம் நினைக்கிறோம். அவர் ஜூன் மாதம் 9, 13-ம் தேதிகளில் தேருதல் சம்பந்தமாக பிரசங்கம் செய்தபொழுது ஜனசமூகக் கொள்கை சம்பந்தமான கனவுகளைக்கண்டு மயங்கிவிடக்கூடாதென்று வாக்காளர்களுக்கு அவர் எச்சரிக்கை செய்தார். ஏனெனில் இந்தக் கனவு திடீரென்று பலித்துவிடாது. இது அழகிய நோக்கம்தான் என்றும் காலக்கிரமத்தில் தோன்றிவிடும். எந்நிலைமையிலும் ஐரோப்பாவில் சிரமங்கள் இருந்துவரும்பொழுதும், ஜப்பான் முறியடிக்கப்படாமலிருக்கும்பொழுதும், அதிக நஷ்டத்தின்பேரில் அடைந்த லாபத்தை இழக்கும் அபாயத்துக்கு நேசதேசத்தார்கள் உட்பட்டிருக்கும் சமயத்திலும் இது நிறைவேறுது. ஐரோப்பாவின் நிம்மதியை உத்தேசித்தே மிகவும் முக்கியமான முடிவுகள் ஏற்படவேண்டும், அதற்கு ராஜிய அனுபவமில்லாதவர்கள் உபயோகப்படமாட்டார்கள். அனுபவமும், திடசித்தமுள்ளவர்களும்தான் தேவைப்படும். ஒலிபெருக்கில் ஜூன் 13-ம் தேதியன்று மிஸடடர் சர்ச்சில் பின்வருமாறு சொன்னார் :—

"விவகாரத்துக்குதவாத ஜனசமூக வாதங்களைக் கிளப்புவதற்கு இதைவிடக் கெடுதலான சமயம் ஒருபொழுதும் இருக்காது. இப்பொழுது அவ்விதம் கிளப்பினால் நம்முன் நிற்கும் பிரச்னைகள் தாமதப்பட்டு, குறுக்கிடப்பட்டு, மறைந்துவிடக்கூடும்.

"உலகத்தில் நமக்குள்ள ஸ்தானத்தை இழக்கவேண்டியிருக்கும். பிரிடன் செய்த தியாகங்களுக்கும், பிரிடனுக்குக் கிடைத்த வெற்றிகளுக்கும், புகழுக்குப் பதிலாக நாசம்தான் கிடைத்துவிடும்.

"தேருதலின் பயனாக பிரிடனில் கக்ஷிச் சச்சரவு தோன்றினால் உலகத்தின் கண்யத்திலிருந்து பிரிடன் மறைந்துவிடும். கக்ஷிகளின் ஆவேசங்களும், கொள்கைகளும், பேராசையும் நமது வாழ்க்கையை பாதிக்கக்கூடுமானால் உலகத்திலுள்ள பெரிய வல்லரசுகளான உறுதியும், தீரமும் பொருந்திய ருஷ்யாவும், மூன்றரை வருஷம் உத்தியோக காலமுள்ள ஜனாதிபதியுள்ள அமெரிக்காவும், அவர்களுடைய இஷ்டப்படி, பிரிடனின் ஆலோசனைக்குச் செவி சாய்க்காமலேயே தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ளுவார்கள். பிரிடன் அயல்நாடுகளில் சமாதானம் செய்துகொள்ளவேண்டும். உள்நாட்டில் கக்ஷிக் கலகத்தை நடத்தவேண்டியிருக்கும்."

ஜூன் 9-ம் தேதியன்று செய்த ஒலிபெருக்கில் அவர் பின்வருமாறு சொன்னார்:—"ருஷ்யா, அமெரிக்காவுடன் நாம் செய்த ஒப்பந்தத்தை, பிரிடனின் யதார்த்தத்தினாலும், பிரிடனின் வலிமையினாலும்தான் பரிபாலிக்க முடியும்."

இந்த புத்திசாலித்தனமான வார்த்தைகளை ஒவ்வொரு கக்ஷியாரும் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். ஒன்று, ஜெர்மனி இன்னும் அமைதிக்குவரவில்லை. ஜெனரல் ஈஸன் ஹவர் சொன்ன பிரகாரம் வெற்றிகிடைத்தபொழுது தலைகொழுத்து நின்ற ஜெர்மானியர்கள் இப்பொழுது சமாதான காலத்தில் மிகவும் சாந்தகுணமுள்ளவர்கள் போல் காணப்படுகிறார்

கள். இது நம்பத்தக்கதில்லை. S. S. படையைச் சேர்ந்த அநேகர்கள் ஆடைகளை அணிந்து கொண்டு கைதி முகாம்களிலிருந்து வெளியேவர முயலுகிறார்கள். ஜெர்மன் சட்டடங்களில் "ஹிட்லர் வாழ்க" என்ற சின்னங்கள் தோன்றுகின்றன. "வாலிபமுள்ள நாஸிகளே விழித்துக்கொள்ளுங்கள்" என்று டைப் அடித்த விளம்பரங்கள் பொது ஜனங்கள் கூடும் இடங்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் பொது மக்களும் இதில் கலந்து கொள்ளுகிறார்களென்று தெரியவருகிறது. ருஷ்யத் தொழிலாளர்கள் சென்ற ஒரு ரெயில் வண்டி சுடப்பட்டது. ஆகையால் ஜெர்மனியை ராணுவ முறையில் பலஹீனமற்றதாகச் செய்வதென்பது சுலபமான காரியமல்ல. அதுவும் இன்னும் முடிந்தபாடில்லை. ஏற்கனவே இருந்த ஐரோப்பிய ஆலோசனைக் கமிஷனுக்கு பதிலாக மத்திய மேன்பார்வைக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்றுபட்ட ஒத்துழைக்கும் நிர்வாகமாதலால் அதை நாம் வரவேற்கவேண்டும். ஆகிலும் நான்கு நிர்வாக வட்டாரங்கள் இருக்கின்றன. மத்திய சபை தகுந்த முறையில் அடக்கியாளாத பக்ஷத்தில், அவைகள் ஒவ்வொன்றும் தன்னிஷ்டப் படி நடந்துகொள்ளும். இந்த நிர்வாகங்களின் ராணுவமயம் போய்விட்டது. ராணுவத் தலைவருடன் ஒரு உயர்தர ராஜீய ஆபீஸரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மேலும் ஆக்கிரமிப்பு வட்டாரங்களில் ருஷ்ய வட்டாரத்தின் எல்கைமட்டும்தான் விவரிக்கப்பட்டிருக்கிறது. பிரிடன், அமெரிக்கா வசமுள்ள பிரதேசங்களின் பெரும் பாகத்துக்கும், ருஷ்யா பாத்தியம் கொண்டாடுகிறதென்று இப்பொழுது வெளியாகுகிறது. பிரான்ஸின் பாகம் தெளிவுபடவில்லை.

ராணுவ நடவடிக்கையைப்போல ஜெர்மனியின் தற்போதிய பிரச்னைகளையும் தீர்க்க சாதுர்யமும், மன உறுதியும், அனுபவமும் தேவைப்படுமென்று அறியலாம். மத்திய கௌன்ஸில் ஒன்றுபட்ட நடவடிக்கைக்குத்தான் உபயோகமுள்ளதாக இருக்கும். அது வெற்றிகரமாக வேலை செய்யவேண்டுமென்றால் அதற்கு, மற்ற வல்லரசுகளுடன் பரஸ்பர நம்பிக்கையுடன் ஒத்துழைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த தலைவர்கள் தலைமை வகிக்கவேண்டும்.

கடைசியாக, ஜெர்மனி என்ற நாடே இல்லாத வண்ணம் ஜெர்மனியைச் சின்னாபின்னம் செய்து விடுவதா அல்லது ஒருவகைப்பட்ட ஜெர்மன் தேசத்தை அமைத்துவிடுவதா என்ற மகத்தான பிரச்னை இருந்து வருகிறது. இப்பொழுது ஜெர்மானியர்களுடன் கலந்துகொள்ளக் கூடாதென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இது போன்ற அநேக நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டு ஜெர்மன் ஜாதியின் கொள்ளையடிப்பு முறைகள் நிரந்தரமாக அழிக்கப் படவேண்டும்.

வி வி வி வி வி

**சான்பிரான்ஸிஸ்கோ.** புத்திசாலித்தனமும் மன உறுதியுமுள்ளவர்கள் இந்த நெருக்கடியில் தலைமை வகிக்கவேண்டும் என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லிவருவதற்கு உலகத்தின் மற்றொரு பாகத்தில் நடைபெறும் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு ஆதரவளிக்கிறது. எதிர்கால சமாதானத்தை நிலை நாட்டுவது உலக ஸ்தாபனத்தை அமைப்பதைப் பொருத்திருக்கிறதென்றும், மகாநாட்டில் சிறிய நாடுகளும் பெரிய நாடுகளும், அடிக்கடி சண்டையிட்டுக் கொள்ளுகின்றனவென்று அடிக்கடி தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. கை தேர்ந்த ராஜதந்திரியும் இப்பொழுது வாஷிங்டனிலுள்ள பிரிடிஷ் அயல் நாட்டு மந்திரியுமான ஹாலிபாக்ஸ் பிரபு, மகாநாட்டிற்கு ஒரு தகுந்த எச்சரிக்கை விடுத்திருக்கிறார். ஜூன் 13ம் தேதியன்று அவர் பின்வருமாறு சொன்னார்:—

"நீங்கள் புதிய உலகத்திலிருக்கிறீர்கள். சமாதானத்தையும் ஒழுங்கு முறையையும் விரும்பும் எல்லா நாடுகளும் ஒன்றுபட்டிருக்கவேண்டும். அவ்விதம் இல்லாவிடில் அவர்கள் எக்காலத்திலும் வெளிவர முடியாத அந்தகாரத்திற்குள் மறைந்துவிட நேரிடும். இந்த விஷயத்தில் பெரிய வல்லரசுகளுக்கும் மற்றவர்களுக்கும் விரோதமுள்ள அக்கறைகள் கிடையாது. எல்லாம் பெரிய வல்லரசுகளுக்குள் ஏற்படும் ஒற்றுமையைப் பொருத்திருக்கிறது. இது சிறிய நாடுகளுக்கு அபாயம் விளைவிக்காததுடன் அவைகளுக்கு அத்யாவசிய மான பாதுகாப்பாக இருக்கும். உலகத்தை ஆளுவதற்கு அநேகம் தலையுள்ள ஒரு யதேச்சாதிகாரியை நியமிப்பதாகவும், மற்றவர்கள் பேரில் இந்த அநீதியைச் சுமத்து வதாகவும் உத்தேசமில்லை."

நடவடிக்கையின் முற்போக்கு சாவதானமாக நடைபெற்றால், மகத்தான காரியங்கள் முடிவு பெறவேண்டும் பொழுது அவ்விதம் நடப்பது இயற்கைதான் என்று நாம் சொல்லு

வோம். அதற்கு சில தடைகளும், தாமதங்களும் ஏற்படலாம். ஆனால் அவைகள் அற்பமானவைகள். இடையூறுகள் தீர்ந்துவிட்டனவென்றும், ஐக்கியம் பூர்த்தியாகும் தருணம் சமீபித்து விட்டதென்றும் நாம் அடையாளங்களைக் காண்கிறோம். ரத்துக்கொள்கை இறுதியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. தர்மகர்த்தா, மாண்டேட், சுயராஜ்யம் என்ற கொள்கைகளுக்கு ருஷ்யா செய்துவந்த ஆக்ஷேபணையும் வாபஸ் பெறப்பட்டது.

மகாநாடு ஜுன் 23ம் தேதியன்று முடிவு பெறலாம்.

வி வி வி வி வி

**மூன்று வல்லரசுகளின் சந்திப்பு.** இந்த வாரத்தில் ஜனாதிபதி ட்ருமானின் விசேஷ தூதர்களான டேவிஸும் மிஸ்டர் ஹாப்கின்ஸும் லண்டனிலும் மாஸ்கோவிலும் சிலாக்கியமான நடவடிக்கைகளை முடிவு செய்திருக்கிறார்கள். மூன்று பெரிய வல்லரசுகளின் கூட்டம் ஜூலை முடிவுக்குள் நடைபெறும் என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார். நல்ல முறையில் விட்டுக் கொடுத்ததற்காக ஜனாதிபதி ட்ருமான் ஸ்டாலினை ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். போலிஷ் பிரச்னையைத் தீர்த்துவிடவும் நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது. கைது செய்யப்பட்ட 16 போலிஷ் தலைவர்களும் விடுவிக்கப்பட்டார்கள். இந்த வார முடிவுக்குள் போலந்துக்கு ஒன்றுபட்ட நிர்வாகத்தை அமைக்க ஒரு மகாநாடு கூட்டப்படும்.

வி வி வி வி வி

**கௌரவங்கள்.** பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரிக்கும் ஜெனரல் ஐஸன்ஹவருக்கும் ஆர்டர் ஆப் விக்டரி என்ற ருஷ்ய ஸ்டார் வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஸ்டாரிலும் 99 வைரங்களும் மரகதங்களும் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்று 4,000 பவுன் பொருமானமுள்ளது.

பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரிக்கு அமெரிக்க D. S. பதக்கமும் G. C. B.-ப்பட்டமும், அளிக்கப்பட்டிருக்கின்றன. விமானப்படைத் தலைவரான ஸர் ஆர்தர் ஹாரிஸுக்கும் G. C. B. வழங்கப்பட்டிருக்கிறது. மார்ஷல் ஜுகோவுக்கு ராணுவ சம்பந்தமான G. C. B. பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. ஜெனரல் ஐஸன்ஹவருக்கு லண்டன் நகரத்தின் சுதந்திரம் என்ற பட்டமும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வைபவத்தின்பொழுது வழங்கப்பட வேண்டிய உறைவாள் தயாராக இல்லாததினால் அவருக்கு வெல்லிங்டன் பிரபுவின் உறைவாள் கொடுக்கப்பட்டது.

வந்தனோபசாரம் சொல்லும்பொழுது அவர் லண்டனுக்குப் பின்கண்ட புகழுரையை வெளியிட்டார்.

"யுத்த சரித்திரத்தை ஆராய்ந்து வரும் எவரும் லண்டன் நகரத்தின் நடவடிக்கையினின்றும் ஒரு படிப்பினையை அறியாமல் இருக்கமுடியாது. பிரிடிஷ் சாம்ராஜ்யம் தன்னந்தனியே நின்று, முஸ்தீப்புகளில்லாமலும் ஆனால் ஹிட்லரின் படைகளை சமாளிக்க ஊக்கத்துடனும் இருந்து வந்தபொழுது, லண்டன்தான் முதன்முதலில் யுத்த கஷ்டங்களை அனுபவித்தது. வெடிகுண்டுகளும், பறக்கும் வெடிகுண்டுகளும், V-வெடிகுண்டுகளும் லண்டன் பேரில்தான் வீசப்பட்டன. அப்பொழுதும் நீங்கள் வேலை செய்து வந்தீர்கள். நீங்கள் எதிரியின் தயவைக் கோரவில்லை. நீங்கள் தோல்வி வந்துவிடுமென்று வருத்தப்படவில்லை. பிரிடனுக்காக நடந்த போர் சாச்வதமான கீர்த்தியை உங்களுக்கு அளித்துவிட்டது. உங்களுடைய நம்பிக்கைக்கும் சகிப்புத் தன்மைக்கும் இறுதியில் நல்ல வெகுமதி கிடைத்துவிட்டது".

30,000 லண்டன் வாசிகளுக்கு அவர் பின்வருமாறு கூறினார்:—"நீங்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் நான் ஒரு லண்டன் வாசிதான், உங்களைப்போல நானும் கூட்டத்தில் கலந்துகொண்டு குதூஹலப்படத் தயாராக இருக்கிறேன்."

வி வி வி வி வி

**தூரக்கிழக்குப் போர்.** தூரக்கிழக்கில் நேசதேசப் போர் திருப்திகரமாக நடந்துவருகிறது. ஐரோப்பாவிலுள்ள துருப்புகள் மின்னல் வேகத்துடன் தூரக்கிழக்குக்கு அனுப்பப்படுகின்றனவென்று ஜெனரல் ஐஸன் ஹவர் சொல்லுகிறார். ஜப்பானின் இறுதி நாசத்திற்காக, அமெரிக்க, பிரிடிஷ், ஆஸ்திரேலிய, இந்திய, டச்சு, சீனப் படைகள் ஜப்பானைச் சுற்றி வளைக்கத் தயார் செய்துவருகின்றன. நேசதேச கடற் படையும், விமானப்படையும் சீனாவில் இறங்குவதற்கும் அல்லது ஜப்பானைப் படையெடுப்பதற்கும் உபயோகமுள்ள தளங்களை சம்பாதித்துவருகின்றன. ஆகினாவாவில் வடக்குப்பகுதியிலிருந்து ஜப்பானியர்கள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டார்கள். தெற்கில்

தப்பி ஓடக்கூடாதபடி ஒரு சிறிய பிரதேசத்தில் எதிரி இருந்துவருகிறான். இந்தவாரத்தில் ஆஸ்திரேலியா போர்னியோவில் படைகளை இறக்கியது. அநேக இடங்களில் படைகள் இறங்கியதுடன் பிரிடிஷ் போர்னியோவின் தலைநகரமான புருனே பிடிபட்டது. சைனாவில் ஜப்பானியர்கள் தோல்வியடைந்து குவாங்க்ஸி, ஹோனான் மாகாணங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தோ-சைனாவுக்குப்போகும் இடைவெளி துணிக்கப்பட்டிருக்கிறது. பர்மாவில 30,000 ஜப்பானியர்கள் பெகுக்காடுகள் வழியாக தப்பி ஓட சிரமப்பட்டுவருகிறார்கள். முதல் முதலாக ஒரு சில தனிப்பட்ட ஜப்பானியர்கள் சரணடைந்தார்கள். யந்திர பீரங்கிகளும், துப்பாக்கிகளும், கிரனேடுகளும் பெற்றிருந்த 21 ஜப்பானியர்கள் பிரிடிஷ் இந்தியத் துருப்புகளிடம் சரண புகுந்தார்கள் இந்த சரணாகதி இராவதி நதியின் முகத்துவாரத்தில் நடைபெற்றது. பர்மியர்கள் பழிவாங்கிவிடுவார்களென்று பயந்து பிரிடிஷ் துருப்புகளின் வருகையை அவர்கள் எதிர்பார்த்துவந்தார்கள்.

வெறிபிடித்தவர்கள் சரணாகதி செய்வதென்பது முக்கியத்வமுள்ளது. வழக்கமாக தற்கொலை செய்து கொள்ளுகிறவர்கள் சரணாகதி செய்வதென்பது வழக்கவிரோதமானது.

பர்மாவில் ஜப்பானியர்களைத் துன்புறுத்த கொரில்லாப்படைகள் கிளம்பி விட்டன. அவர்கள் எதிர்பாராத வகையில் அநேக வழிகளில் ஜப்பானியருக்குத் தொந்தரவு அளித்து வருகிறார்கள். மூன்று நாளைப் போரில் பர்மிய கொரில்லாப்படைகள் நூறு ஜப்பானியர்களைக் கொன்று விட்டார்கள்.

தென்கிழக்கு ஆசியாவிலும் ஜப்பானியப் பிடிப்புத் தளர்ச்சி பெற்று வருகிறது. மலேயாவிலும், டச்சுக்கிழக்கிந்தீஸிலும், ஸியாமிலும் பருவகால மழை அவர்களுக்குச் சிறிது ஆச்வாசம் அளிக்கும். மழை ஓய்ந்தபின் அவர்கள் சிறிதுகாலம் தற்காப்புப் போரை நடத்தக்கூடும். ஜப்பானுக்கு பேராபத்து தோன்றிவருகிறது. விமான நடவடிக்கை அதிகரிக்குமென்று ஜப்பானிய ரேடியோ அடிக்கடி ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்துவருகிறது. நிலைமை மோசமாகிவிட்டதென்று பிரதம மந்திரியும் நினைக்கிறார். சகலவிதமான ஜனநாயக முறைகளும், ஒத்தி வைக்கப்பட்டுவிட்டன. பிரதம மந்திரி பூர்ண அதிகாரத்தையும் பெற்று விட்டார். 15 முதல் 60 வயது வரையிலுள்ள ஆடவர்களும் 17 முதல் 40 வயது வரையிலுள்ள ஸ்திரீகளும் கொண்ட வாலண்டியர் படை தயாரிக்கப்படுகிறது.

வி வி வி வி வி

**தற்கொலை தந்திரம்.** தன்னைப் பலிகொடுப்பது என்பதுதான் ஜப்பானின் கடைசி உபாயம். தற்கொலைப் படைகள், டாங்கிகளை அழிக்கும் சுரங்க வெடிகள், காமிகாசி படைகள் என்று ஜப்பான் பிரசாரம் செய்துவருவதின் அருத்தம் இதுதான். ஹிட்லர் கடைசித் தருவாயில் ரகசிய ஆயுதங்களை உபயோகித்தது போல் ஜப்பான் இந்த உபாயங்களைக் கையாண்டு வருகிறது. சுரங்க வெடிகளை வெடிக்கச் செய்வதில் யந்திர சாதனங்களைப்போல் மனிதன் அவ்வளவு உபயோகமுள்ளவனல்ல. மனித மீன்வெடி சரியான தருணத்தில் வெடிக்கிறதில்லை. ஏனெனில் அதிலுள்ள மனிதன் சரியான தருணத்தில் தன்னுடைய குடும்பத்தைப்பற்றி சிந்தித்துவிடுகிறான். சமீபத்தில் பர்மாவில் கைவசப்படுத்தப்பட்ட மனித டாங்கி சுரங்க வெடியானது ஜப்பானியரல்லாத ஒரு ஸோல்ஜர் என்று வெளியாகிற்று.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.** (1) ஐந்து வருஷ தேசப்ரஷ்டத்துக்குப்பின் ஹாகன் மன்னர் நார்வேக்குத் திரும்பி வந்தார்.

(2) யூ படகு நடவடிக்கையைப் பற்றி பிரிடிஷ் அமெரிக்க கூட்டறிக்கை கடைசியாக வெளியிடப்பட்டிருக்கிறது. அட்லாண்டிக் கடல் போரில் 713 யூ படகுகள் மூழ்கடிக்கப் பட்டிருக்கின்றன. இதை வின ஜெர்மானியர்கள் அநேக யூ படகுகளை இறுதி கட்டத்தில் தாங்களே மூழ்கடித்திருக்கிறார்கள்.

(3) ஜப்பானுடன் போரை நடத்த உபரியாக 1,750 மிலியன் பவுன்களை பிரிடிஷ் பார்லிமெண்ட் கிராண்டு செய்திருக்கிறது.

(4) லவாண்ட் பிரச்னையைத் தீர்க்க ஐந்து வல்லரசு மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று பிரெஞ்சுக்காரர்கள் செய்த கோரிக்கையை பிரிடனும், அமெரிக்காவும் நிராகரித்து விட்டன.

(5) இஸ்திரியா, டிரியஸ்தி, ஸ்லோவேனி கடற்கரை பிரதேசம் முதலியவற்றை ஆக்கிரமித்து தாத்காலிகமாக ஆக்ஷி புரிய பிரிடன், யூகோஸ்லாவியா, அமெரிக்கா என்ற நாடுகளுக்குள் ராஜுவ ஒப்பந்தம் ஏற்பட்டது.

(6) ஜெர்மனியே இல்லாததினால் ஜப்பானிலுள்ள ஜெர்மன் அயல் நாட்டு ஸ்தானீகர் காரியாலயம் கலைக்கப்பட்டது.

(7) எதிரியிடமிருந்து பிரசார முறையில் ஒலிபெருக்கியதற்காக வில்லியம் ஜாயிஸ் என்ற ஹாஹா பிரபு லண்டனிலுள்ள பௌதெரு போலிஸ் கோர்ட்டின் முன் இம்மாத முடிவுக்குள் விசாரணை செய்யப்படுவான்.

---

# ஜெர்மனிக்கு ஒலிபெருக்குவது.

## பிரிடிஷ் ஒலிபெருக்கில் பூரா நாள் நிகழ்ச்சி.

(நியூஸ் கிரானிகள்).

ஜெர்மானியர்களுக்கு அறிவிக்கப்படும் செய்திகள் லண்டனிலுள்ள பிரிடிஷ் ஒலிபெருக்கு நிலயம் மூலமாக வெளியிடப்படுமென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

ஜூன் மாதம் 3-ம் தேதியன்று பிரிடிஷ் ஒலிபெருக்கு நிலயம் பூரா நாள் நிகழ்ச்சியாக ஜெர்மன் பாஷையில் ஒலிபெருக்கும், அத்துடன் ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க ஒலிபெருக்கும் ஒத்துழைக்கும்.

நிகழ்ச்சி காலே 6-மணிக்கு ஆரம்பமாகும். முதலில் செய்திகள் அறிவிக்கப்படும். அடுத்தபடியாக தொழிலாளர்களுக்கு விசேஷ அறிக்கை வெளியிடப்படும். 7-மணிக்கு மறுபடியும் செய்திகள் அறிவிக்கப்படும். 8-மணிக்கு ஐரோப்பாவில் செய்யப்படும் அமெரிக்க ஒலிபெருக்கு பிரிடனிலிருந்து ஒலிபெருக்கப்படும். நாள் பூராவும் செய்திகளும் வியாக்யானங்களும் பிரிடிஷ் ஒலிபெருக்கு மூலமும், ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க ஒலிபெருக்கு மூலமும் வெளியிடப்படும்.

இதற்கும் யுத்த காலத்தில் ஜெர்மனிக்கு விடுத்த ஒலிபெருக்குக்கும் இது வரையில் யாதொரு வித்தியாசமும் இல்லை. அப்பொழுது செய்திகள் நேசதேசத்தாருக்கு சாதகமாகவும், பாதகமாகவும இருந்தாலும், அவைகளை உள்ளது உள்ள படிக்கும் வியாக்யானங்களுடனும் பிரிடன் சொல்லி வந்தது.

புதிய நிகழ்ச்சியில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதல் முதலாக லண்டனிலிருந்து சங்கீதம் ஒலிபெருக்கப்படும். யுத்தகாலத்திலிருந்த "நீ என்ன அறிய விரும்புகிறாய், பிரெயினின் நம்பிக்கை, இங்கிலாந்தில் இவ்வாரம்" போன்ற செய்திகள் ஒலிபெருக்கப்படும்.

நிகழ்ச்சி விரிவானது. அதில் கலைஞான சம்பந்தமான விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நாடகமேடை, சினிமா, கலை, சாஸ்திரம் முதலியவைகளைப்பற்றியும் சொல்லப்படும். புஸ்தக விமர்சனம் தினசரி நிகழ்ச்சியாக நடைபெறும். மேலும் ஜனரஞ்சகமான விஞ்ஞான சாஸ்திர சம்பாஷணை நடைபெறும்.

பிரிடனிலுள்ள ஜெர்மன் யுத்தக் கைதிகள் ஒலிபெருக்குவதற்கும் இந்த நிகழ்ச்சியில் அவகாசம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒலிபெருக்கில் ஜெர்மன் பாஷையில் பேசுகிறவர்கள் ஜெர்மன் பொதுமக்களுக்கு அகில பிரிடனிலுள்ள ராஜீய விஷயங்களைப் பற்றியும் தகவல்களை ஒலிபெருக்குவார்கள். பொதுத் தேருதல் விவரித்துச் சொல்லப்படுகிறது. பொதுவாக ஜனநாயகம் எவ்விதம் வேலை செய்து வருகிறதென்று விளக்கிக்காட்ட முயற்சி செய்யப்படுகிறது.

அதற்கு அஸ்திவாரம் யதார்த்தமான செய்திகளும் அதைப்பற்றிய உபயோகமுள்ள வியாக்யானமும்தான். இந்தத் தகவல்கள் உத்தியோக தோரணையில் வெளியிடப்படும்.

---

# யுத்தக் குற்றவாளிகளின் பரிசீலனை.

## லண்டனுக்கு நீதிபதி ஜாக்ஸனின் விஜயம்.

(டெயிலி டெலகிராப்பின் ராஜதந்திர நிருபர்).

எந்தபிரதேசத்தில் குற்றம் செய்யப்பட்டதென்று காணக்கூடாத மிகப்பெரிய குற்றவாளிகளை நேசதேசத்தார்களின் நிர்வாகங்களின் ஒன்றுபட்ட முடிவின் பிரகாரம்

சிக்ஷிக்கவேண்டுமென்று 1943-ம் வருஷம் நவம்பர் மாதம் மாஸ்கோவிலிருந்து வெளியிட்ட அறிக்கையை அமுலுக்குக்கொண்டுவருவதற்காக அவசியமான ஒரு ஸ்தாபனத்தை அமைக்க அநேக வாரங்களாக சுறுசுறுப்பாக நடைபெற்றுவரும் சர்ச்சைகளில், லண்டனுக்கு நீதிபதி ஜாக்ஸன் விஜயம் செய்ததன் பயனாக அதிக முன்னேற்றம் ஏற்படுமென்று நம்பப்படுகிறது.

துரிதமாகவும் கடுமையாகவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் உத்தேசத்துடன் நீதிபதி ஜாக்ஸனை நியமித்திருக்கிறேன் என்று ஜனாதிபதி ட்ரூமான் வெளியிட்ட அபிப்பிராயத்தை பிரிடிஷ் நிர்வாகமும் ஒப்புக்கொள்ளுகிறது.

மே மாதம் 2-ம் தேதியன்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் பின்வருமாறு கண்டிருந்தது:—"அமெரிக்க நிர்வாகம் மற்ற நேசநாடுகளின் சம்மதத்தின் பேரில் சர்வ தேச ராணுவ நீதி ஸ்தலத்தின் முன் விசாரணைக்குக் கொண்டுவர உத்தேசிக்கும் ஐரோப்பிய அச்சுநாட்டுத் தலைவர்கள், முக்கியமான ஏஜெண்டுகள், உடந்தையாக இருந்தவர்கள் முதலியவர்கள்பேரில், அக்கிரமங்கள், யுத்தக்குற்றங்கள் முதலிய குற்றச் சாட்டுகளைத் தயாரித்து அவற்றை பரிசீலனைக்குக் கொண்டுவருவதற்காக அமெரிக்காவின் நியாயவாதியாக நீதிபதி ஜாக்ஸனை நியமித்திருக்கிறோம்."

"எந்த பிரதேசத்தில் குற்றம் செய்தார்கள் என்று கண்டுபிடிக்கமுடியாதவர்கள்" என்ற விளக்கத்தில் பாஸிஸ்டு நாடுகளின் தலைவர்களும், அவர்களின் நிர்வாக அங்கத்தினர்களும், மனித இயல்பற்ற, சட்ட விரோதமான செய்கைகளுக்குப் பொறுப்புள்ள படைகளின் தலைவர்களும் சேர்க்கப்படுவார்கள்.

இவர்களுக்கும் ஒரு பிரதேசத்தில் குற்றம்செய்த சிறிய குற்றவாளிகளுக்கும் வித்தியாசம் பாராட்டப்படவேண்டும். அவர்களை பிரதேச அதிகாரிகளே விசாரணைசெய்யவேண்டும்.

லண்டனில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கப்போவதாக நீதிபதி ஜாக்ஸன் கூறினார்.

**ஐஸன் ஹவரைச் சந்தித்தார்.**

பிரான்ஸிலிருந்தபொழுது நீதிபதி ஜாக்ஸன் ஜெனரல் ஐஸன் ஹவரையும் மற்ற அமெரிக்க சேனையைச்சேர்ந்த நியாய இலாகா நிபுணர்களையும் சந்தித்தார். அமெரிக்காவின் சார்பாக கேஸ்களைத் தயார்செய்து தஸ்தாவேஜிகளையும் ஒளிப்படங்களையும் தயாரித்து அமெரிக்காவுக்கு அனுப்பவேண்டுமென்று அவர்களுடன் ஏற்பாடு செய்தார். லண்டனிலும், பாரிஸிலும் ஜெர்மனியில் அமெரிக்க வட்டாரத்திலுள்ள அமெரிக்க நிர்வாகத் தலைநகரிலும் அவர் ஆபீஸ்களை ஸ்தாபிப்பார்.

சில வாரங்களுக்குள் விசாரணை துவக்கப்படுமென்று நீதிபதி ஜாக்ஸன் நம்பியிருக்கிறார். ஆகிலும் இந்த பிரச்னையில் அதிக சிக்கல்கள் இருக்கின்றன. பிரிடனும், அமெரிக்காவும் ருஷ்யாவும் பிரான்ஸும் சேர்ந்து ஒரு சர்வதேச நியாயஸ்தலத்தை ஏற்பாடு செய்வதென்பது சுலபமான காரியமல்ல. பல்வேறு அபிப்பிராயங்களையும், நீதி முறைகளையும், விசேஷ தேசீய அக்கரைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு காலதாமதம் ஏற்படும்.

பின்பற்றுவதற்கு இதற்குமுன் யாதொரு நடவடிக்கையும் இல்லாததால் நியாய சபை விதிகளைத் தாங்களே ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

விசாரணையைத் துவக்கும்பொழுது காணப்படாத ரிப்பன்திராப் போன்ற நாஸிக் குற்றவாளிகளின் கேஸ்கள் மிகவும் ருசிகரமானவை. ஹிட்லர் சம்பந்தப்பட்டமட்டில் சரியான ருஜு கிடைக்காவிடில் அவன் இறந்தானென்று நம்பிக்கைகொள்ளமுடியாது. மற்ற நாஸித் தலைவர்களைப்போல ஹிட்லரும் குற்றவாளிகள் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டு விசாரணை செய்யப்படுவான்.

---

# ஐரோப்பாவில் துணைக்காவல் கொண்ட சாமான்கப்பல்கள் நடமாட்டம் ஒய்ந்தது.

## கப்பல்கள் இனிவேகமாகச் செல்லக்கூடும்.

**(டெயிலி ஹெரால்ட் ரிபோர்ட்டர்).**

மே மாதம் 28-ம் தேதி நடுராத்திரி முதல் நேசதேச சாமான் கப்பல்களிலிருந்த விளக்கணைப்பு நின்றது. துணைக்காவலும் ஒய்ந்தது.

இது முதற்கொண்டு தூரக்கிழக்கு சமுத்திரங்களிலுள்ள கப்பல்களைத் தவிர பாக்கி பிரிடிஷ் வியாபாரக் கப்பல்கள் விளக்குகளை பூராவாக ஏற்றிவிடுவார்கள். இரவில் கப்பல்களில் விளக்கவிப்பு கிடையாது.

நியூ யார்க்கிலுள்ள ஒரு பிரிடிஷ் கடற்படை பிரமுகர் கேப் டவுனுக்குத் தெற்கிலும் கிழக்கிலுமுள்ள கப்பல்களுக்குத் துணை அனுப்பப்படுமென்று நினைக்கலாமென்று சொன்னார்.

சென்ற சில நாட்களாக வடக்கு அட்லாண்டிக்கிலுள்ள அமெரிக்க கடற்கரை ஓரமாக கப்பல்கள் இரவில் வெளிச்சத்துடன் துணைக்காவலன்னியில் சென்றுவருகின்றனவென்று தெரியவருகிறது.

துணைக்காவல்களை எடுத்துவிட்டபின் கப்பல்கள் துரிதமாகச் செல்லக்கூடும். கப்பல்களின் உபயோகம் ரெட்டித்துவிடும் என்று கடற்படை அதிகாரிகள் சொல்லிவருகிறார்கள். இதற்கு முன் ஒரு பிரயாணத்தை 28 நாட்களில் முடித்த ஒரு கப்பல் இப்பொழுது 14 நாட்களில் அதை முடித்துவிடும்.

கப்பல் முதலாளி ஒருவர் பின்வருமாறு சொன்னார்:—“துணைக்காவல் கொண்ட போக்குவரத்து நின்றுவிட்டபோதிலும் சாமான்களும், சாமான்கப்பலும், இன்னும் யுத்தப்போக்குவரத்து இலாகாவின் கட்டுப்பாட்டிலிருந்து வருகின்றன. சாமான்களின் மொத்தம் இரண்டு மடங்காகும். ஆனால் அவைகள் உணவுப்பொருள்களா, அல்லது மற்ற சாமான்களா என்று சொல்லுவது அரசாங்கத்தார் கையிலிருக்கிறது. சாமான்களை நாம் பொருக்கியெடுக்க முடியாது. மற்ற நாடுகளிலிருந்து நமக்கு பங்கீடு செய்யப்படும் உணவுப்பொருள்களைத்தான் நாம் இறக்குமதி செய்யலாம்.”

சமீபகாலத்தில் நிர்வாகம் யுத்த சாமான்களை ஏற்றிச்சென்ற அநேக கப்பல்களை கப்பல்களின் ஸ்வான்தார்களிடம் ஒப்புவித்துவிடுவார்களென்று கப்பல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது. முக்கியமாக க்வீன் மேரியும், க்வீன் எலிஸபெத்தும் ஸதாம்ப்டனில் திருத்தியமைக்கப்பட்டு, மறுபடியும் பொதுஜன நன்மைக்கு உபயோகிக்கப்படும்.

---

## யுத்த காலத்தில் விஞ்ஞான சாஸ்திரத்தின் சேவை.

### சமாதான காலத்துக்கான படிப்பினை.

(டைம்ஸ் பத்திரிகை).

விஞ்ஞான சாஸ்திரத் துறையில் யுத்தமானது தொழிற் பயிற்சியில் அதிக உத்சாகத்தை உண்டுபண்ணியிருப்பதுடன் புத்திசாலித்தனத்துக்கு துணிவுகரமான அற்புதச் செய்கைகளையும் மேற்கொள்ள ஆர்வமளித்திருக்கிறது.

ப்ளுடோவின் ரகசியங்கள் வெளிவந்த மறு நாளே மாக்கவன் பிரபு அவருடைய தலைமையிலுள்ள தொழிற்சாலை யுத்த முயற்சிக்கு அநேக விதங்களில் பேருதவி செய்திருக்கிறதென்று தெளிவான, பல்வேறு உதாரணங்களை எடுத்து உரைத்திருக்கிறார். நைட்ரஜனும், அதன் மூலம் உண்டாக்கப்பட்ட பொருள்களும், உரத்துக்கும், வெடி மருந்துக்கும், அடிப்படையானது. இந்தத் தொழிற்சாலைதான், தேசத்தின் உணவு உற்பத்தி அதிகரிப்புக்கும், ஆயுத உற்பத்திக்கும் மூல காரணம்.

விவசாயத்துக்கு இந்த தொழிற்சாலை செய்த உதவி யுத்தத்துடன் நின்றுவிடாது. பூச்சிகளைக் கொல்லுவதற்காக ரசாயன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட சாமைக்ஸேன் என்று சொல்லப்படும் மருந்து வெட்டுக் கிளிகளை அழிக்கக்கூடும்.

பரிக்ஷை செய்யப்பட்டுவரும் மற்றொரு ரசாயனப் பொருளும் மிகவும் உபயோகமுள்ளது. செடியின் வளர்ச்சிக்குரிய சத்திலிருந்து ஆராய்ச்சி செய்து முடிவு செய்யப்பட்ட இந்த ரசாயனம், கேவலமான சாஸ்திரத்துக்கும், நடைமுறையில் உபயோகப்படக் கூடிய விஞ்ஞான சாஸ்திரத்துக்கும், உள்ள சம்பந்தத்தை விளக்கிக் காட்டுகிறது. அந்த ரசாயனம் பயிர்களைச் சுற்றியுள்ள நாணல்களை அழிப்பதுடன் பயிர்களுக்கும் யாதொரு கெடுதலையும் செய்யாது.

விஞ்ஞான சாஸ்திர முறைப்படி பாலிதேன் கண்டுபிடிக்கப்பட்டது. அது ராடார் கருவியை அமைக்க உபயோகமுள்ளதாக இருந்து, ஜெர்மன் விமானப் படையின் தோல்விக்குப் பேருதவி செய்திருக்கிறது. தொழிற்சாலைகளில் இதுவரையில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த சாஸ்திர முறைகளில் உள்ள சிரமங்களை நிவர்த்திக்க யுத்தம் ஆர்வம் அளித்தது.

இந்த ஆர்வத்தினால் விஞ்ஞான சாஸ்திர முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடிய அபரிமித மாக ஒன்றையே பரிஷ்காரம் செய்வது என்ற முறை ஒழிந்து சேர்ந்து வேலை செய்யும் முறை தோன்றிவிட்டது. ரசாயன சாஸ்திரிகளும், தத்வ சாஸ்திரிகளும், உலோக ஆராய்ச்சிக்காரர்களும், இஞ்சினியர்களும் சேர்ந்து பியாட் (டாங்கியை எதிர்க்கும் காலாட்படை புரொஜக்டர்) என்றும் தளவாடத்தைக் கண்டுபிடித்தார்கள். இதைத்தான் முன்னேறும் படைகள் கோட்டைகளையும் டாங்கிகளையும் தாக்க உபயோகித்தன. இந்த ஆயுத உற்பத்தியில் விஞ்ஞான சாஸ்திர முறையில் நிறுவப்படும் திட்டத்துக்கும், அதன் பிரயோகத்துக்கு மிடையிலுள்ள காலஹரணம் யுத்த அவசியத்தினால் நிவர்த்தி செய்யப்பட்டது. 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் திட்டமும், தளவாடங்களும் தயாரிக்கப்பட்டன. நவம்பர் மாதத்தில் முதலாவது சேனை பியாட்டுகளை வடக்கு ஆபிரிக்காவுக்கு எடுத்துச் சென்றது. ஒரு வருஷத்துக்குப் பின் 1,00,000 பீரங்கிகள் தயாரிக்கப்பட்டுவிட்டன.

இந்த அற்புதச் செய்கை விஞ்ஞான சாஸ்திரிகளுக்கும், தொழிற் பயிற்சியுள்ளவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் உள்ள ஒத்துழைப்பை வெளியிடுகிறது. இந்த ஒத்துழைப்பின் மூலம் தான் எரிவெடிகளும், தோட்டாக்களும், பெர்ஸ்பெக்ஸ் என்ற வெடிக்காத பளபளப்பான சாமானும் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. மாக்கவன் பிரபு பின்வருமாறு சொல்லுகிறார்:—"பெர்ஸ்பெக்ஸ் இல்லாவிடில் விமானப் படையில் தற்பொழுது உள்ள ரகங்கள் அசாத்யமாகயிருந்திருக்கும்."

விஞ்ஞான சாஸ்திரமும், கைத்தொழிற் பயிற்சியும், திறமையுள்ள தொழிலாளர்களின் சேவையும் ஒத்துழைப்பதினால் ஏற்பட்ட படிப்பினை சமாதான காலத்துக்குப் பொருந்தக் கூடியது.

---

## ஸிரியா நிகழ்ச்சிகள்

### டிகாலின் தவறான அபிப்பிராயங்கள்

(*W. N.* யூயர் டெயிலி ஹெரால்டின் ராஜதந்திர நிருபர்).

ஜூன் 2-ம் தேதியன்று டிகாலி வெளியிட்ட அறிக்கையிலிருந்து தற்பொழுது லண்டனில் பேச்சுகளைத் துவக்குவது இயலாததென்று நிதர்சனமாகத் தோன்றுகிறது.

டிகாலுடன் இங்கு விவகாரம் செய்வதாக நான் உத்தேசிக்கவில்லை. ஆகிலும் அவனுடைய அறிக்கையில் காணப்படும் சில தவறான அபிப்பிராயங்களை எடுத்துக்காட்டுவது அவசியமாகும். உதாரணமாக, பிரிடிஷ் ஆயுதங்கள் அணிந்த ஒரு கூட்டம் பிரெஞ்சுப் படைகளைத் தாக்கின என்பதை நாம் மறக்காமல் இருக்கமுடியாது. பிரிடிஷ் ஆயுதங்கள் ஸிரியர்களும், லெபானிஸ்களும் ஒன்றும் வழங்கப்படவில்லை. ஆகிலும் பிரெஞ்சுக்காரர்களின் பூர்ணசம்மதத்தின்பேரில் படைகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும் லெவாண்டில் பிரான்ஸுக்கு 5,000 துருப்புகள் இருக்கும்பொழுது பிரிடனுக்கு 6 லக்ஷம் துருப்புகள் இருக்கின்றனவென்பதும் உண்மைக்குப் புறம்பானது.

உண்மைகளை அஜாக்கிரதையுடன் டிகால் சொல்லுகிறான் என்பது முக்கியத்வமுள்ளதில்லை. அவனுடையவும், ஸிரிய, லெபானின் தலைவர்களுடையவும் மனப்பான்மை தற்பொழுது அமைதியுடனும், நியாயமாகவும் ஒரு முடிவுக்கு வரக்கூடுமென்று நினைப்பது சாத்யமல்லவென்று தோன்றுகிறது.

இந்நிலைமையில் மூன்று வல்லரசுகளுக்குப் பதிலாக ஐந்து வல்லரசுகள் கூடிப்பேச வேண்டுமென்று ருஷ்யா ஆலோசனை சொல்லுவதை நாம் நிதானித்துப்பார்க்கவேண்டும்.

அதேபோல் லெவாண்ட் பிரச்னையையும், அராபிய நாடுகளுக்கும், பெரிய வல்லரசுக்குமுள்ள சம்மந்தத்தைப்பற்றியும் சர்ச்சை செய்யவேண்டுமென்று டிகால் சொல்லுவதையும் நாம் தீர்க்க ஆலோசனை செய்துபார்க்கவேண்டும். இதை நாம் ஏற்றுக்கொண்டால் அராபிய நாடுகள் இச்சந்தர்ப்பத்தில் டுனிஸியாவிலும், மொராக்கோவிலும் உள்ள பிரெஞ்சு காப்பாற்றப்பட்ட நாடுகளைப்பற்றிய பிரச்னைகளையும் சர்ச்சைக்கு கொண்டுவரும்.

---

## ஜப்பான் போரை நடத்தும்.

### அடிபணிந்தால் அவமானம்.

(டெயிலி மெயில் பத்திரிகை).

ஜப்பான் தரையிலும் ஆகாயத்திலும் கடலிலும் முறியடிக்கப்படுகிறது. ஜப்பானியத் தீவுகள் பேரில் ஏராளமான வெடி குண்டுகள் விழுந்து கொண்டிருக்கின்றன. டோக்கியோ

பாழாகி விட்டதென்று பிரதம மந்திரி சூசுகி சொல்லுகிறார். இப்பொழுது மும்மரமாக நடைபெற்றுவரும் விமானத்தாக்குதல் ஜப்பானின் யுத்த சக்தியை அழித்து சில மாதத்தில் யுத்தத்தில் ஜப்பானை முறியடிக்கவும் லக்ஷியம் கொண்டது.

ஜப்பானின் அந்திய காலம் சமீபித்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை. அது சீக்கிரமாகுமா அல்லது தாமதிக்குமாவென்பதுதான தற்போதிய பிரச்னை. பிரம்மாண்டமான பறக்கும் கோட்டை விமானங்கள், ஜப்பானிய தொழிற்சாலை பிரதேசங்கள் பேரில் வெடிகுண்டுகளை பலமாக வீசி வரும் பொழுதும், அமெரிக்க சேனையின் காரியாலயத்தலைவரான ஜெனரல் மார்ஷலும் அயல் நாட்டுப் பொருளாதார நிர்வாகியான மிஸ்ட்டர் கிராலியும் நாம் எதிர்பார்த்சுதற்கு மேலாக ஜப்பானியப்போர் நீண்டதாகவும் சிரம சாத்யமாகவும் இருக்குமென்று எச்சரிக்கை செய்து வருகிறார்கள். அந்த எச்சரிக்கைகளை நாம் உணர்ச்சி முறையிலும் பொருளாதார முறையிலும் செவி சாய்த்துக்கேட்க வேண்டியதுதான். தோல்வி நிச்சயமென்று ஜப்பானியர்கள் அறிவார்கள். லாபங்களைக் கைவிட்டு ஜப்பானைக் காப்பாற்றக்கூடிய எந்த ஷரத்துகளையும் ஒப்புக்கொண்டு யத்தத்திலிருந்து விலக ஜப்பான் எப்பொழுதும் தயாராக இருக்கிறது. ஜெர்மனியைப்போல ஜப்பானுக்கும் நேசதேசத்தார்களும் ஒன்றும் விட்டுக்கொடுக்கத்தயாராக இல்லை. அதம பக்ஷமான நிபந்தனை, நிபந்தனையற்ற சரணாகதி தான். அதாவது ஜப்பானும் ஜப்பானிய வெற்றி பிரதேசங்களும் சரண் அடையவேண்டியது தான். ஆனல் இந்த அவமானத்தை பலம் பொருந்திய எந்த ஜப்பானிய நிர்வாகமும் ஒப்புக்கொள்ளாது. ஆகையால் பிராணன் போகும் வரையிலும் தூரக்கிழக்கிலுள்ள எதிரி போரை நடத்தியே தீருவான்.

பர்மாவில் 14-வது சேனைக்குக் கிடைத்த வெற்றிகள் சுலபமாகக் கிடைத்தவையல்ல. ஆகினாவாவில் அமெரிக்கர்கள் கடுமையாகப் போர் புரிய வேண்டியிருக்கிறது. ஆகிலும் ஜப்பானின் தொழிற்சாலைகளும் போக்குவரத்துகளும் சீர்கெட்டுப்போய்விட்டால், நிச்சயமாக பரவலாக உள்ள தேசங்களிலுள்ள ஜப்பானின் யுத்த முயற்சி அவயவங்கள் உலர்ந்துபோய் மறித்துப்போய்விடும். ஜெர்மனியில் இந்த அனுபவம் தான் நமக்கு ஏற்பட்டது. ஜெர்மனியைவிட ஜப்பான் நல்ல சேர்மானமாகவுள்ள லக்ஷியம்.

---

# தூரக்கிழக்கு ஸ்காபா புளோ.

## நேசதேசத்தாருக்கு ஆகினாவாவின் உபயோகம்.

### ஸண்டே டைம்ஸ் பத்திரிகையில் கடற்படை நிருபரான காப்டன் ரஸ்ஸல் கிரென்பெல், R. N.

பெரும்பாகம் அமெரிக்சர் வசமாகிவிட்ட ஆகினாவாவில் நாகாகாஸுகு, சின் என்ற இரண்டு சிறந்த துறைமுகங்கள் சமீப தூரத்திலிருக்கின்றன.

நாகாகாஸுகு உலகத்திலேயே மிகவும் அடக்கமான துறைமுகம். அதை தூரக்கிழக்கு ஸ்காபா புளோ என்றே சொல்லலாம். ஆர்க்னி தளத்தைப்போல இந்தத் துறைமுகமும் பெரிய ஜலாசயத்தை உடையது. மேலும் அதைப்போல் கேந்திர ஸ்தானமும் பெற்றிருக்கிறது.

ஸ்காபா புளோ சமீபத்திலுள்ள வில்ஹெல்ம்ஷேவனிலுள்ள ஜெர்மன் கடற்படை தளத்திலிருந்து 500 மைலிலிருக்கும்பொழுது நாகாகாஸுகு சாசெபோவிலுள்ள ஜப்பானிய கடற்படை தளத்திலிருந்து 400 மைல்களிலிருக்கிறது. ஆகையால் ஜப்பானிய கடற்படை சலனத்தைக் கவனித்துவர பிரிடிஷ் அமெரிக்க கடற்படைக்கு ஆகினாவா முக்கியமான நிலயமாக இருக்கும்.

மேலும் படையெடுப்புக்கு அது பாய்ச்சல் ஸ்தலமாகவும் உபயோகமுள்ளதாக இருக்கும். ஜப்பானைப் படையெடுப்பதென்பது சிரமசாத்யமான காரியம்தான். அதற்கு ஏராளமான கப்பல்கள் தேவைப்படும். படையெடுப்புத் தேதியை நிர்ணயிக்க கப்பல்களின் சங்கையை அதிகரிப்பு முக்கிய அம்சமாகும். மேலும் ஜப்பானுக்கு அருகில் ஆகினாவா என்ற சிறந்த துறைமுகத்தைப் பிடிப்பதென்பது படையெடுப்பைத் துவக்கி அதை பரிபாலித்து வருவதென்பதற்குத் தேவையான கப்பல்களில் சிக்கனத்தை உண்டுபண்ணக்கூடியது.

ஆகினாவாவினல் மற்றொரு லாபம் உண்டு. சைனாக் கடல்களுக்கும் பஸிபிக்குக்கும் மத்தியிலுள்ள ஒரு பீடபூமியாக அது இருக்கும். ஆகினாவா நமது வசமாகிவிட்டால் நேசதேச கடற்படை, விமானப்படை உதவியுடன் கிழக்கு சீனா, மஞ்சள் கடல்களில்

கண்காணிப்பு செய்யக்கூடும். அதாவது ஜப்பானிலிருந்து சைனாவுக்கும் மஞ்சூரியாவுக்கும் செல்லும் கடல மார்க்கம் துணிக்கப்படலாம். ஜப்பான் சுற்றிவளைத்துச் சென்று ருஷிமா ஜலசந்தி வழியாகத்தான் கொரியாவுக்குச் செல்லக்கூடும்.

டிரக்கையும் மற்ற அநேக பஸிபிக் தீவுகளையும் தாண்டிச் சென்று அவைகளிலிருந்த படைகளை துணித்துவிட்டதுபோல ஜப்பானையும் உபயோகமுள்ள வகையில் துணித்து விடலாம்.

---

# ஜப்பானின் ராணுவ பிற்போக்குகள்.

## ஆகாய, கடற்படை தாழ்மை.

### லிபரேட்டர்.

*அப்ஸர்வர் பத்திரிகையின் ராணுவ நிருபர்.*

சென்ற ஐந்து மாதங்களில் ஜப்பானுக்கு தொடர்ச்சியாக அநேக பிற்போக்குகள் ஏற்பட்டுள்ளன.

ஜப்பான் பர்மாவின் பெரும் பாகத்தை இழந்துவிட்டது. எல்லைப்புறத்திலுள்ள தற்காப்புத் தீவுகளை அது இழந்துவிட்டது. டோக்கியோவிலிருந்து 640 மைல்களிலுள்ள ஐவேஜிமா ஊடுருவிச் செல்லப்பட்டது. ஜப்பானிலிருந்து 440 மைல்களிலுள்ள ஆகினுவாவை ஜப்பான் கூடிய சீக்கிரம் இழந்துவிடும். மேலும் ஜெர்மனி என்ற இரண்டாம் போர் முனையை ஜப்பான் இழந்துவிட்டது.

ராஜீய முனையிலும் ஜப்பான் சிறிது இடம் கொடுக்கும்படி நேரிட்டுவிட்டது. ருஷ்யா நடுநிலைமை ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டது. சைனாவில் ஜப்பானின் சூழ்ச்சிகள் பயன்படவில்லை. ஆனால் இவைகள் ராணுவ பிற்போக்குகளைப்போல அவ்வளவு பாதகமாக இல்லை. ஆகையால் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் அமைக்கப்பெற்ற புதிய ஜப்பானிய நிர்வாகம் போர் முனைகளில சமாளித்து நின்றுகொண்டு ராஜீய, ராஜ தந்திர முனைகளில் அதிக கவனம் செலுத்திவருகிறது. ஜப்பானியப் போர் நீடித்திருக்குமா அல்லது சீக்கிரம் முடிவடைந்துவிடுமாவென்பது பெரும்பாலும் இந்த ராஜ தந்திர சூழ்ச்சிகளைப் பொருத்ததாகும்.

ராணுவ நிலைமையைப் பயன்படுத்தி டோக்கியோ ராஜதந்திர முறைகளைக்கையாண்டு வருகிறது. ராணுவ நிலைமை இறுதி கட்டத்தில் ஜெர்மனில் காணப்பட்டதுபோல் அவ்வளவு மோசமாக இல்லை. டோக்கியோ இதை மிகுதியாகப் பயன் படுத்திக்கொள்ளும். பெரிய வல்லரசுகளுக்குள் ஜப்பான் ஒன்றுதான மனிதபலம் பூராவையும் படைக்காகத் திரட்டவில்லை. ஜப்பான், கொரியா, மஞ்சூரியா, பார்மோஸா முதலிய நாடுகளின் ஜனத்தொகை 150 மிலியன்களாக இருந்தபோதிலும், குறைந்த ஜனத்தொகையுள்ள ஜெர்மனி திரட்டிய சேனை டிவிஷன்களின் பாதி அளவுக்குக் குறைவாகத்தான் ஜப்பான்படை திரட்டியிருக்கிறது. இப்பொழுது ஜப்பானின் கவசம்பூண்ட படைகளில் 4 மிலியன்கள் மேல் ஆட்கள் இல்லை. அதாவது ஜப்பானைப்பபால் மூனறில் ஒரு பங்கு ஜனத்தொகையுள்ள பிரிடனின் சேனை அளவுதான ஜப்பானிடம் இருக்கிறது. ஆகையால ஜப்பானில் படைக்கு சேர்க்கக்கூடிய வயதுவாய்ந்த 3 மிலியன் ஜனங்கள் தயாராக மூலபலமாக இருக்கிறார்கள்.

மேலும் சிங்கப்பூரிலிருந்து பீகின்வரையிலுமுள்ள கடல் மார்க்கங்கள் ஜப்பான்வசம் இருந்துவருகின்றன. மதிப்பு எவ்விதமிருப்பினும் சைனாவில் ஜப்பானுக்கு ஒரு பெரிய படை இருக்கிறதென்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. பஸிபிக்போரில் ஜப்பானின் எதிர்கால யுத்த தந்திரத்தை இந்தப் படைகள் நிர்ணயிக்கும். நஷ்ட ஈடு செய்ய முடியாத அளவிற்கு ஜப்பான் விமானங்களை இழந்துவிடா விட்டாலும் அதன் விமானப்படை நேசதேச உற்பத்தி அளவுக்கு சமமாக இருக்காது. ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டதினால் பிரிடனும் அமெரிக்காவும் அவசியமானால் ஒரு மாதத்திற்கு 10,000 விமானங்களைக் கட்டமுடியும். ஜப்பானின் மாதந்திர உத்தமபக்ஷமான உற்பத்தி 1,500 விமானங்கள் தான்.

அதேபோல ஜப்பானின் கடற்படையும் குறைந்துவிட்டது. ஆகிலும் சொல்லப்படுவது போல அது அவ்வளவு பலமாக அழிபடவில்லை. ஆகிலும் கடற் போரில் சுறுக்கிடமுடியாத அளவுக்கு ஜப்பானியப் படை அழிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நேசதேசத்தார்கள் கடலிலிருந்து தரைப்போருக்கு யுத்த தந்திரத்தை மாற்றியிருப்பதை ஜப்பான் வரவேற்கிறது.

# ஜப்பானைப் படையெடுக்க ஆயத்தம்.

## தூரக்கிழக்கு நார்மண்டியின் பிரச்னைகள்.

(மாஞ்செஸ்டர் கார்டியன்).

வெடிகுண்டு வீச்சினாலும், முற்றுகையினாலும் ஜப்பான் சோர்வுற்றுவிடும்.

ஆகிலும் ஜப்பானுக்கு நல்ல புத்தி தோன்றுதென்றும் சிரமங்களைப் பொருத்துக் கொண்டாலும் ஜப்பான் சரணடையாதென்றும் நாம் நினைக்கலாம். அமெரிக்க ராணுவத் தலைவர்கள் இவ்விதம் மதித்துப் பார்க்கவேண்டும். இதிலிருந்து தூரக்கிழக்கு நார்மண்டியின் பிரச்னைகள் தோன்றும். ஜப்பான் எந்த நேரத்திலும் அடிபணியும். ஆகிலும் படையெடுப்புக் கான திட்டங்கள் பரிஷ்காரமாகச் செய்யப்படவேண்டும். இது ஒரு புதிய இனம். பஸிபிக் போருக்கு வேண்டிய யுத்தக் கப்பல்களும் விமானங்களும் அமெரிக்காவிடம் ஏராளமாக இருக்கின்றன. அநேக மிலியன்கள் உள்ள சேனையை எதிர்த்துப் போராட படைகளை இறக்குவதென்றால் ஏராளமான சேனைகள் தேவைப்படும். ஜப்பானைப் படையெடுக்க நடவடிக்கைகளைத் துவக்க ஆறு மாதங்களாகும். அதற்குமுன் பார்மோஸாவைப் பிடித்து அதை தளமாகச் செய்துகொள்ளவேண்டும்.

முதல் முதலாக சைனு மார்க்கமாகப் போர் ஆரம்பமாகுமென்று ஒரு சமயம் எண்ணப் பட்டது. ஆகிலும் நேசதேசத்தாருக்கு கடலிலும் ஆகாயத்திலும் ஆதிக்கம் ஏற்பட்டு விட்டதால் எதிரியின் மர்ம ஸ்தானத்தை நேர்முகமாகத் தாக்குவதுதான் லாபகரமானது. அது வீழ்ச்சிபெற்றால் சர்வமும் விழுந்து விட்டதாக ஆகும். ஜப்பான் மஞ்சுகோவில் போரை நடத்துமென்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் கொத்தளங்களின் சமீப சரித்திரம் அதை ஆதரிக்கவில்லை. போக்குவரத்து, ஸப்ளைகளின் சிரமம்தான் தாமதத்துக்கு காரணங்கள். குறுகலான ஒரு கால்வாயை நாம் தாண்டவேண்டியிருந்தபொழுது 1944-ம் வருஷத்தில் நாம் செய்த ஆயத்தங்களின் அளவை மதித்துப் பார்க்க வேண்டும். டோக்கி யோவுக்கு சமீபத்திலுள்ள பெரிய அமெரிக்கத் துறைமுகமும் தளமும் அங்கிருந்து 1,700 மைல்கள் தூரத்திலுள்ள பிலிப்பைன்ஸிலிருக்கிறது. குவாமும், சைபானும் 1,500 மைல்கள் தாண்டியிருக்கின்றன. அவைகள் பெர்ல் துறைமுகத்திலிருந்து 5,000 மைல்கள் தாண்டி யிருக்கின்றன. உலக சரித்திரத்திலேயே ஜப்பானைப் படையெடுப்பதுபோன்ற மகத்தான இருவகைப்பட்ட நடவடிக்கை இதுவரையில் நடந்திருக்காது. ஆனால் அதைத் துவக்க கால தாமதம் ஏற்படும். படையெடுப்பு ஆரம்பித்துவிட்டால் வெற்றி நிச்சயம் தான்.

ஜப்பானியக் கடற்படையில் எஞ்சியுள்ள பாகம் கடற்கரைத் தற்காப்புகளுக்காக கையிருப்பில் வைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. ஆனால் D தினத்திற்குமுன் அதன் பெரும் பாகம் வெடி விமானங்களால் அழிக்கப்பட்டுவிடும். இறுதியில் படையெடுப்பு கப்பல்கள் துறைமுகங்களை விட்டுப் புறப்படும்பொழுது ஒரு கப்பல்கூட ஆகாயத்திலிருந்து மூழ்கடிக்கப்படாத நிலைமை ஏற்பட்டுவிடும். தரையில் எதிரி எப்பொழுதும்போல முரட்டுத் தனமாகப் போரை நடத்துவான். ஆகிலும் முஸ்தீப்புகளின் தரக்குறைவுடனும் ஜெர்மனி சிரமப்பட்டதுபோல் போக்குவரத்து மார்க்கங்கள் சீர்கெட்டும் ஜப்பான் போரை நடத்தும். ஜெர்மனியில் உபயோகிக்கப்படாத அநேக ஆயுதங்கள் நம்மிடமிருந்து வருகின்றன. மேலும் அதற்குள் ஜப்பானின் யுத்த தளவாட தொழிற்சாலைகளும் அநேகமாக அழிக்கப்பட்டுவிடும். இவைகளெல்லாம் எதிர்காலத்தில் நிச்சயமாக நடைபெறக்கூடியவை. இவைகளை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஜப்பானிலுள்ள புத்திசாலிகளான ராஜதந்திரிகள் இப்பொழுது எவ்வகையினாலாகிலும் சமாதானத்தைப் பெறவேண்டுமென்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

---

# ஜப்பானை ஒழிக்கும்வரையில் வெடிகுண்டு வீச்சு.

## சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் தாழப்பறந்து தாக்குகின்றன

(காலின் பெட்னல்).

பஸிபிக் போர்முனையிலிருந்து காலின்பெட்னல் அனுப்பிய இந்த கட்டுரையை டெயிலி மெயில் பிரசுரித்திருக்கிறது. அதில் விமானப்படை ஜப்பானியப்போரில் எவ்விதம் ஒத்தாசை செய்திருக்கிறது என்பதை மதித்துச்சொல்லுகிறார். பெட்னல் அநேகம் தடவை ஐரோப்பா பேரில் பறந்துசென்றிருக்கிறார். பத்திரிகை நிருபர்களுக்குள் ஐரோப்பாவில் நடைபெற்ற கனமான வெடிகுண்டு வீச்சைப்பற்றிய அறிவு அவருக்கு அபரிமிதமானது.

48-மணிகளுக்கு ஒரு தடவை டோக்கியோவையும் மற்ற சமீபத்திலுள்ள லக்ஷியங்களையும் 500 அல்லது அதற்கு மேற்பட்ட சூபர்பறக்கும் கோட்டை விமானங்கள் தாக்குவதில் இருந்து மேஜர் ஜெனரல் கர்டிஸ்லேமெ, உஷ்ணரேகை பிரதேசத்திலுள்ள மரியனுஸ் தீவுகளிலிருந்து சரித்திரத்திலேயே மகத்தான விமான நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டான் என்று தெரியவருகிறது. ஜப்பானை ஆக்கிரமிப்பதற்கு இது முற்போக்கான நடவடிக்கையாகும்.

ஜெர்மனிபேரில் விமான நடவடிக்கையைத் துவக்க அநேக வருஷங்கள் தயாரிப்பு செய்யவேண்டியிருந்தது. ஆனால் ஜப்பானின் யுத்த தளவாடங்கள் ஒரு சில மாதங்களுக்குள் அழிக்கப்பட்டுவிடும்.

இது சாத்யம் என்பதற்கு சில குறிப்பான அம்சங்களிருக்கின்றன. ஆனால் இதுவரையில் ஜப்பான் மூர்க்கமாகவும், ஏற்பாடாகவும் எதிர்த்துப் போராடிவருகிறது. பெர்லினைத் தற்காப்புசெய்ய உபயோகிக்கப்பட்டதுபோல் இரட்டிப்பு மடங்குள்ள கனமான விமான எதிர்ப்பு பீரங்கிகள், உலகத்தில் இரண்டாவது மிகப்பெரிய நகரமும், 366 சதுர மைல்கள் கொண்டதுமான பெரிய டோக்கியோவைத் தற்காப்பு செய்துவருகின்றன. அதைத்தவிர 200 தேடுவிளக்குகளும், மூர்க்கத்தனமாகப் போர்புரியும் சண்டை விமானங்களும், ஜப்பானியத் தலைநகரைக் காபந்து செய்துவருகின்றன.

டோக்கியோவைத் தற்காப்பு செய்துவரும் தரை பீரங்கிகள் ஜெர்மன் 88 மிலிமீடர் பிரங்கிகள்தான். ஜெர்மன் திட்டப்படி அவைகள் ஜப்பானில் உண்டுபண்ணப்பட்டிருக்கலாம் அல்லது ஜெர்மனியிலிருந்து தூரக்கிழக்குக்கு நீர்மூழ்கிகள் மூலமாகவோ அல்லது முற்றுகையைத் தாண்டிச்செல்லும் கப்பல்கள் மூலமாகவோ கொண்டுவரப்பட்டிருக்கலாம். இப்பொழுது துவக்கப்பட்டிருக்கும் பலமான விமான நடவடிக்கையில் சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஆகாயத்தில் வெகு உயரம் பறந்துசெல்லுவதில்லை. அவைகள் 5,000 அடி உயரத்திலிருந்து டோக்கியோபேரில் வெடிகுண்டுகளை வீசிவருகின்றன. கனமான வெடி விமானங்கள் இவ்வளவு துணிவுடன் பெர்லின்பேரில் தாழப்பறந்து சென்றிருக்க முடியாது. ஆனால் ஜப்பானில் அது சாத்யமாக இருக்கிறது. ஏனெனில் ஜப்பானிலுள்ள ராடர் கருவிகளும் மற்ற உபாயங்களும் ஜெர்மானியர்களிடம் இருந்ததுபோல அவ்வளவு திலாக்யமானதல்ல. அது அமெரிக்க விமானிகளுக்குப் பெரியசாதகம். ஜப்பானிய பீரங்கிப் படைகள் கண்ணுக்குப்புலப்படாததைச் சுட சக்திபெற்றிருக்கவில்லை. ஆகையால் தாழ்மையாக உள்ள ஒரு மேகத்தில் மறைந்துநின்று சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் விமான எதிர்ப்பு பீரங்கியின் வெடிகுண்டு வீச்சிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

பிரிடனில் 8-வது விமானப்படையுடனிருந்த ஜெனரல் லெமெ பருவகாலத்தை உத்தேசித்துவிமானங்கள் தாழச்செல்லவேண்டுமென்று உத்தரவிட்டான். ஜப்பான்பேரில் சூறுவளிக்காற்று பலமாக அடிப்பதினால் விமானங்கள் அதிக உயரத்தில் பறந்து டோக்கியோவுக்குச் செலலும்பொழுது காற்று மணிக்கு 250-மைல்கள் வீதம் அடித்துக்கொண்டிருக்கிறது. அதாவது விமானங்கள் காற்றுக்குள் அகப்பட்டுக்கொண்டால் அவைகள் அசைவற்று தரையிலுள்ள பீரங்கிகளுக்கு லக்ஷியமாகிவிடுகின்றன. காற்றை அனுசரித்து அவைகள் பறந்து சென்றால் அவைகள் லக்ஷியத்தைத் தாண்டிச்செல்லுவதுடன் விமானத்திலுள்ள வெடிகுண்டு லக்ஷியத்தைக்கண்டுபிடிக்கிறவர்கள் குறிப்பாக லக்ஷியத்தையும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

ஆனால் இப்பொழுது நடைபெறும் விமான நடவடிக்கையில் விமானப்படை சீப்மார்ஷல் ஹாரிஸின் விமானப்படைகளுக்கு ஐரோப்பாவில் கிடைத்ததுபோல் சூபர் பறக்கும் கோட்டை விமானங்களும் லக்ஷியங்களைக் குறிதவறுமல் அடித்துவருகின்றன. விமானங்கள் அதிக உயரம் செல்லாததினால் அவைகள் ஒவ்வொன்றிலும் 10 அமெரிக்க டன்கள் வெடிகுண்டுகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இந்த பிராந்தியத்தில் 1,000 வெடி விமானங்கள் சென்று தாக்கவேண்டியதும் இல்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஒவ்வொரு நடவடிக்கையிலும் விமானங்கள் ஆத்யந்தம் 3,000 மைல்கள் செல்லவேண்டுமென்றாலும் டோக்கியோவுக்குச் செல்லும் சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் இங்கிலாந்திலிருந்து பெர்லினுக்குள் சென்ற பழைய பறக்கும் கோட்டை விமானங்களைப்போல் மூன்று அல்லது நான்கு மடங்குள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்லுகின்றன. ஐரோப்பாவைவிட இந்த பிரதேசத்தில நஷ்டமும் குறைவானது. ஒரு வருஷத்திற்குமுன் சைனாவிலிருந்து, விமான நடவடிக்கை ஆரம்பித்ததுமுதல் மே மாதம் 24-ம் தேதியன்று டோக்கியோவைத் தாக்கின நடவடிக்கையில்தான் 550 விமானங்களில் 12-க்கு நஷ்டம் ஏற்பட்டது. விமான நஷ்டக் கணக்கில் இதுவே ஜாஸ்தி அளவு என்று சொல்லலாம்.

விமான நடவடிக்கைக்கு உபபலமாக மாதா மாதம் 200 புதிய சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் அனுப்பப்படுகின்றன. மூன்று மாதங்களுக்குள் எதிரியின் சண்டை விமானங்களின் உற்பத்தியில் நான்கில் மூன்றுபங்கு குறைக்கப்பட்டபின்னும், ஒவ்வொரு தாக்குதலிலும் எதிரியின் தரைத் தற்காப்புகளை 30 அல்லது 40 நிமிஷங்கள்வரையில்தான் சமாளித்து இருக்கவேண்டுமென்பதையும் கவனித்தால் இது ஒரு மிகப்பெரிய விமானபலமாகும். ஐரோப்பாவில் வெடி விமானங்கள் எதிரியின் பிரதேசத்தில 10 அல்லது 11-மணிகள் நேரம் சமாளித்து நிற்கவேண்டியிருந்தது.

ஜெர்மனியின் தொழிற்சாலைகள் 50 தனிப்பட்ட நகரங்களில் அமைக்கப்பட்டிருந்தன. ஜப்பானின் தொழிற்சாலை சக்தி 150 மைல்கள் அரைவிட்டமுள்ள பிரதேசத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளன.

ஜப்பானியர்கள் இன்னும் இருந்துவரும் தீவுகளிலிருந்து நடவடிக்கையைத் துவக்கும் வலிமை பயன்படுத்தக்கூடியது இதுதான். ஜப்பானில் முக்கியமாக ஏழு லக்ஷியங்கள்தானிருக்கின்றன. எல்லாம் இனிது நடைபெற்றால் இந்த லக்ஷியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்த சில மாதங்களுக்குள் அழிக்கப்பட்டுவிடும்.

---

# தூரக்கிழக்கில் பிரிடிஷ் கடற்படையின் சுறுசுறுப்பு.

## ஜப்பானை இறுதியில் தாக்குவதற்கு உதவி.

### பிரியான் டண்ஸ்டால்.

பிரிடிஷ் கடற்படைக்கு கடற்போரின் தன்மை மாறிவருகிறது. ஆகிலும் உபயோகிக்கப்படும் படைகளும், கடந்துசென்ற தூரமும் குறைந்துவிடவில்லை. ரையுக்யூஸ் தீவுகளைத் தாக்கிவரும் உதவி கடற்தளபதி ஸர் பெர்னார்ட் ராலிங்க்ஸிடமுள்ள பிரிடிஷ் பஸிபிக் கடற்படையின் குறிப்பான சங்கியையைப்பற்றி கூடமாக இருந்துவருகிறது. கடற்தளபதி ராலிங்க்ஸும், கடற்தளபதி நிமிட்ஸும் குவாமில் சமீபகாலத்தில் சந்தித்துப் பேசியபொழுது ஜப்பானிய கடற்படையைத் தாக்கும் இறுதிப்போரில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களுக்கு பெரும் பங்கு அளிக்கப்படுமென்று தெளிவுப்படுத்தப்பட்டது.

இதேசமயத்தில் கடற்தளபதி ராலிங்க்ஸின் தேவைக்கு 100 கப்பல்கள் கொண்ட கடற்படை தேவையாக இருக்கிறது. இந்தக் கூட்டத்தில் டிப்போக் கப்பல்களும், பழுதுபார்க்கும் கப்பல்களும், சாமான்களை வழங்கும் கப்பல்களும் இருக்கின்றன. இவைகள் கடற்படையுடன் செல்லும் அல்லது முன்னணி தளங்களில் இருந்துவரும். இதைத்தவிர சர்ப்பாராக் கப்பல்களும், எண்ணெய்க் கப்பல்களும், போக்குவரத்துக் கப்பல்களும் இருக்கின்றன. அந்த கப்பல்கள் கடற்படைக்கும் ஆஸ்டிரலேஷியாவிலும் மற்ற இடங்களிலுமுள்ள முக்கியமான தளங்களுக்கும் போக்குவரவு செய்துவருகின்றன.

அதற்குத் தெற்கில் பிலிப்பைன்ஸில், தெற்குசீனக் கடலிலுள்ள ஜப்பானியக் கடற்படையைத் தாக்கும் இறுதிப்போரில் அமெரிக்க நீர்மூழ்கிகளுடன் பிரிடிஷ் நீர்மூழ்கிகளும் கலந்துகொள்ளுகின்றன. இந்த நடவடிக்கைகள் அநேகமாக முடிந்துவிட்டன. அதற்குத் தெற்கில் கிழக்கு இந்தீஸ்ஸிலும், நியூகினியாவிலும் உள்ள ஜப்பானியப் படைகள் ஜப்பானிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக துண்டிக்கப்படுகின்றன.

பிலிபைன்ஸில் தளங்களைப் பெற்றிருக்கும் பிரிடிஷ் நீர்மூழ்கிகள் கிழக்கு இந்தீஸ் கடற்படையுடன் சேர்ந்து மலாக்கா ஜலசந்தியிலும், வங்காள விரிகுடாவிலும், வேலை செய்துவரும் நீர்மூழ்கிகளுக்கு ஒத்தாசை செய்துவருகின்றன. மலேயாவைக் குறித்தும் புளோரிஸ், ஜாவா, தெற்குசீனக் கடலுக்கு இந்துமகா சமுத்திரத்திலிருந்து ஊடுருவிச் செல்லும் நடவடிக்கைக்கும் இந்த கடற்படைதான் பொருப்பெடுத்துக்கொள்ளும். ஜப்பானுக்கு அருகிலுள்ள சமுத்திரங்களுக்கும் தூரகிழக்குக்கும் பிரிடனின் நவீன யுத்தக்கப்பல்களைக் கொண்டுபோவதென்பது அபாயம் இல்லாத கடல்கள் வழியாக வெகுதூரம் கப்பல்களைக் கொண்டுபோவது என்று நினைத்துவிடக்கூடாது.

ஐரோப்பிய பிராந்தியத்திலிருந்து தூரக்கிழக்குக்கு பிரிடனின் சக்திவாய்ந்த கடற்படை அனுப்பப்பட்டிருக்கிறதென்றாலும், தூரக்கிழக்குக்குப்போகும் ஸப்ளை மார்க்கங்களை பத்திரமாக வைத்துக்கொள்ள அட்லாண்டிக்கிலும், மத்தியதரைக் கடலிலும், இந்துமகா சமுத்திரத்திலும் பிரிடன் போதுமான கடற்படையை வைத்திருக்கிறது.

ஐரோப்பிய சமுத்திரங்களிலும் சுரங்கவெடிகளை அகற்றுவது, நேசதேச துறைமுகங்களைத் திருத்தியமைப்பது, ஜெர்மனியை ராணுவ முறையில் ஆக்கிரமிப்பதற்கான கடல்

சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்ப்பதுபோன்ற அலுவல்களையும் பிரிடிஷ் கடற்படை செய்து வரவேண்டும். ஜெர்மன் துறைமுகங்களிலும், கடற்கரை ஓரமான சமுத்திரங்களிலும், நதிகளிலுமுள்ள கப்பல்கள் கண்காணிப்பு செய்யப்படவேண்டும். சாணுகதிபெற்ற யுத்தக் கப்பல்களைப் புதிப்பித்து அவைகளைப் புதிய சேவைகளுக்கு அனுப்பவேண்டும்.

தூரக்கிழக்கிலும் ஐரோப்பாவிலும் அலுவல்களைக் கவனிப்பதற்காக, பிரிடிஷ் கடற்படை இலாக்கா ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. மே மாதம் 28-ம் தேதி நடு ராத்திரி முதல் போரில்லாத பிரதேசங்களில் இனிமேல் சாமான்கப்பல்களுக்குத் துணைக் காவல் அனுப்பப்படமாட்டாது. போர் நடைபெற்ற இடங்கள் எவை என்று விளக்கிச் சொல்லப்படவில்லை. ஜபபானிய நீர்மூழ்கிகளின் அட்டகாசம் ஓய்ந்துவிடவில்லையாதலால் இந்த பிரதேசங்கள் எதிர்பார்த்ததற்குக் குறைவாகத்தானிருக்கும்.

பிரிடிஷ் கடற்படையாட்கள் இன்னும் சிரமங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறதென்பது 50-வயதுக்கு மேற்பட்ட கடற்படை ஆபீஸர்களும், வேலைக்காரர்களும்தான் விலக்கப்படுவார்கள் என்று கடற்படை இலாக்கா அறிக்கை வெளியிட்டிருப்பதிலிருந்து தெரியவரும். இப்பொழுது ஏராளமான ரிடயரான ஆபீஸர்களும், உபகாரச் சம்பளம்பெற்றவேலைக்காரர்களும், சேவைபுரிந்து வருவதினால் இந்த நடவடிக்கை முடிவடைய காலதாமதமாகும். மற்றொரு புறத்தில் கடல் விமானப்படையின் பலமும் ஜபபானியப்போரின் குறிப்பான தேவைக்குரிய விஷேச ஆபீஸர்களும் வேலைக்காரர்களும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கப்படுகிறார்கள்.

1939-ம்வருஷ செப்டம்பர் 3-ம் தேதிமுதல் 1945-வருஷம் மே மாசம் 8-ம் தேதிவரையிலும் நேசதேசத்தாருக்கு நஷ்டமான கப்பல்களின் ஜாபிதாவை கடற்படைஇலாக்கா வெளியிட்டிருக்கிறது.

இந்தக் கணக்கில் அமெரிக்க,ருஷ்யக் கப்பல்களும் லேசான கடற்கரைப் படகுகளும், படைகளை இறக்கும் கப்பல்களும், படகுகளும் சேர்க்கப்படவில்லை. நஷ்டமான 812 யுத்தக் கப்பல்களில் 776 பிரிடனைச் சேர்ந்தது. 776 கப்பல்களில் 730 பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்தவை. மற்ற கப்பல்கள் கனடிய, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இந்தியா, தெற்கு ஆபிரிக்க கடற்படையைச் சேர்ந்தவை.

சென்ற யுத்தத்தின் நஷ்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும் நஷ்டமான கப்பல்களின் ரகங்களிலும் யாதொரு வித்தியாசமும் கிடையாது. முதல் உலக யுத்தத்தில் 16 நஷ்டமானபொழுது இந்த யுத்தத்தில் பிரிடன் ஐந்து யுத்தக்கப்பல்களைத்தான் இழந்திருக்கிறதென்றால் பெரிய யுத்தக்கப்பல்கள் சுலபமாக தாக்கப்படுமென்பதை பிரிடன் நனகுணர்ந்து ஜாக்கிரதையுடனிருந்து வந்ததென்று புலப்படும்.

யூ படகுகளை அழிக்கும் வேலையில் சிறிய கப்பல்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டதென்று விவரமாக ஒப்பிட்டுச் சொல்லமுடியாது. முதலாவதாக, இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபாடில்லை. இரண்டாவதாக, ஆகாயம் என்ற அம்சம் குறிக்கிடுகிறது. மூன்றுவதாக, லேசான கடற்கரைப்படைகளின் புள்ளிவிவரங்கள் இன்னும் கிடைத்தபாடில்லை. முதல் உலக யுத்தத்தைப்போல இந்த யுத்தத்திலும் பிரிடனுக்கு 77 நீர்மூழ்கிகள் நஷ்டமாகியிருக்கின்றன. இதிலிருந்து பிரிடிஷ் கடற்படையின் பகட்டாக இல்லாத ஒரு பகுதியின் பெருமிதசேவை நன்கு புலப்படுகிறது.

---

## ரெங்கூனில் படைகளிறங்கியதின் விளைவு.

### ஜப்பானிய சஞ்சாரி மூழ்கடிக்கப்பட்டது.

**ரியர் கடற் தளபதி H. G. தர்ஸ்பீல்ட்.**

பர்மாவின் தலைநகரத்தின் விடுதலைக்கு முக்கிய காரணமாக இருந்த பர்மாவிலுள்ள ரெங்கூன நதியின் முகத்துவாரத்தின் இருபக்கத்திலும் பிரிடிஷாரின் இருவகைப்பட்ட நடவடிக்கை மூலம் மே மாதம் ஆரம்பத்தில் படைகள் இறக்கப்பட்டதிலிருந்து ஒரு மிகவும் திருப்திகரமான விளைவு ஏற்பட்டிருக்கிறது.

ரெங்கூன் பிராந்தியத்திலிருந்த ஜப்பானியப்படைகள் கிழக்கக்குப் பின் வாங்கிவிட்டன. மோல்மீனுக்குச் சென்றுகொண்டிருந்த சிறிய படகுகள் தணிக்கப்பட்டு பிரிடிஷ் படைகளால் அழிக்கப்பட்டன. ஆகிலும் எதரியிடம் பர்மா நதிகளுக்குத் தெற்கில் வங்காளா விரிகுடாவின் கிழக்குக் கரையான டென்னஸரிம் கடற்கரை இருந்து வந்தது. அங்கு ஒரு ஜப்பானிய சஞ்சாரி இருப்பதாகத் தகவல் கிடைத்தது.

அந்தக் கடலில் மெர்குயி தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த தீவுகள் ஏராளமாக இருக்கின்றன. மேலும் அது பர்மாவிலும் ஜப்பானியர் ஆக்கிரமிப்புக்குட்பட்ட சியாமிலுமுள்ள விமான தளங்களின் வட்டாரத்துக்குட்பட்டிருந்தது. பிரிடன் போதுமான படைகளைத் திரட்டி சமுத்திரங்களில் ஆதிக்கம் பெறுமுன் பர்மாவிலுள்ள ஜப்பானிய சேனைகளுக்கு சர்ப்பராக்களைக் கொண்டு போவதற்காக மலாக்கா ஜலசந்தி வழியாக சிங்கப்பூருக்கும், ரெங்கூனுக்கும் செல்லும் கப்பல்களை ரக்ஷிக்க அந்த சஞ்சாரி அங்கு வைக்கப்பட்டிருந்தது. அதை எதிரி அதிககாலம் அக்கடலில் வைத்துவிட்டான் என்று தோன்றுகிறது.

ஸர் ஆர்தர்பவரிடமுள்ள கிழக்குக் கடற்படையிலிருந்து ஒரு பகுதி உதவி கடற் தளபதி T. C. வாகரின் கமாண்டின் கீழ் இந்த பிராந்தியத்துக்கு அனுப்பப்பட்டது. கமாண்டர் க்வின் எலிஸபெத் என்ற கப்பலில் பிரயாணம் செய்தார். நாச்சி வகுப்பைச் சேர்ந்த சக்தி வாய்ந்த ஒரு சஞ்சாரி அங்கு இருக்கிறதென்று ஷா என்ற விமானந்தாங்கியிலிருந்து சென்ற வேவுபார்க்கும் விமானங்கள் ஊர்ஜிதம் செய்தன. இந்த நாசகாரியில் பத்து, எட்டு அங்குல வாயுள்ள பீரங்கிகளும், 12, ஐந்து அங்குல வாயுள்ள பீரங்கிகளும், 16 மீன் வெடிகளும் அமைக்கப்பட்டிருப்பதினால் அது மிகவும் சக்திவாய்ந்த கப்பல் என்றே சொல்லலாம். அதற்குத் துணையாக மின்ன காஸி வகுப்பைச் சேர்ந்த, நான்கு 4·7 அங்குல வாயுள்ள பீரங்கிகளும் ஆறு மீன் வெடிகளுமுள்ள நாசகாரியும் இருந்தது.

சஞ்சாரியின் சந்நிவேசம் கண்டுபிடிக்கப்பட்டவுடன் ஜப்பானிய சஞ்சாரி அதிகவேகமாக மலாக்கா ஜலசந்திக்குப் புறப்பட்டது. குறுகலான மார்க்கத்தின் வழியாகச் சென்று தெற்கு சீனக் கடலிலுள்ள ஜப்பானிய தென்மேற்கு கடற் படையுடன் சிங்கப்பூரிலோ அல்லது, அதற்குக் கிழக்கிலோ சேர்ந்துகொள்ளுவதென்று சஞ்சாரி உத்தேசித்தது.

ஷா என்ற விமானந் தாங்கியிலிருந்த அவென்சர் விமானங்கள் அதை வெடிகுண்டுகளால் தாக்கின. வெடிகுண்டுகள் சமீபத்தில் விழுந்தாலும் நேராகக் கப்பலில் விழவில்லை. ஆகையால் காப்டன் M. L. பவரிடமுள்ள சாமாரெஸ், வீனஸ், வீஜிலண்ட், விராகோ, வெருலாம் என்ற பிரிடிஷ் சஞ்சாரிக் கப்பற் கூட்டம் எதிரியை வழிமறிக்க விரைந்து சென்றது. இரவில் மீன் வெடிகளைப் போடுவதற்கும் தயாராக இருந்தது.

கப்பல் கூட்டம் சரியான ஸ்தானத்திற்கு நடுராத்திரியில் நல்ல நக்ஷத்திர வெளிச்சத்தில் வந்து சேர்ந்தது. பின்வாங்கிச் செல்லும் சஞ்சாரிக்கு முன்னதாகவே மலாக்கா ஜலசந்தியில் கப்பற் கூட்டம் 200 மைல் உள்ளே சென்றுவிட்டது.

நாசகாரிகள் சஞ்சாரியை இருபக்கத்திலிருந்தும் தாக்கின. மீன்வெடிகளைப் போட ஒரு மைல் தூரத்திற்குள் வந்துவிட்டன.

தென்கிழக்கு ஆசியா கமாண்டின் தலைமைக் காரியாயித்திலிருந்து வெளிப்பட்ட பிரகாரம் துணிவகரமான தாக்குதல் மிகவும் அற்புதமான முறையில் நடைபெற்றது. மீன்வெடிகளும் பீரங்கிக் குண்டுகளும் ஒரே சமயத்தில் சஞ்சாரியின்பேரில் இருபக்கத்திலிருந்தும் விழுந்தன. சஞ்சாரியின் பீரங்கிகளின் சக்தி பத்து நிமிஷங்களுக்குள் அழிந்துவிட்டது. சஞ்சாரியின் மேல்தட்டு மூழ்கிவிட்டது. அதே நிலைமையில் கப்பல் சிறிது காலம் சமாளித்து நின்றது. இன்னும் சில மீன்வெடிகளைப் போட்டபின் கப்பல் மூழ்கிவிட்டது.

பிரிடிஷ் நாசகாரிப் படை எவ்விதம் தாக்குமென்று எதிரி அறிந்துகொள்ளவில்லை. எதிரி தலைமை வகித்து வந்த சாமாரெஸ் கப்பல்பேரில் 8-அங்குல, 5 அங்குல பீரங்கிகளை பிரயோகம் செய்தான். அதுதான் எதிரியின் திருஷ்டிக்கு முதல் முதலில் தென்பட்டது. அதிலிருந்து இருவர் கொல்லப்பட்டார்கள், மூவர் காயமடைந்தார்கள். ஆனால் கப்பலுக்கு சொற்ப சேதம்தான் ஏற்பட்டது. மற்றக் கப்பல்களில் ஒரு சேதமும் ஏற்படவில்லை.

ஜப்பானிய சஞ்சாரியுடன் இருந்த நாசகாரியின் கதி என்ன ஆகிற்றென்று நிச்சயமாகத் தெரியவரவில்லை. அதையும் பிரிடிஷ் கப்பல்கள் தாக்கி பழுதுபடுத்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

சமமான சாதுர்யமும் கப்பலோட்டும் சக்தியும் இருந்தால் நாச்சிரகத்தைச் சேர்ந்த ஒரு சஞ்சாரி நாசகாரி கப்பற் கூட்டத்தை எதிர்த்து ஜயாதிபெற்றுவிடும். அதே வலுவுள்ள பிரிடிஷ் சஞ்சாரி போர்க் கப்பல்களை ரக்ஷிக்கும் முறையில் எதிரியின் சஞ்சாரியைத் தாக்கப் பின்வாங்காது. ஜப்பானிய சஞ்சாரியை குறைந்த கப்பற்பழுதுடனும், உயிர்ச்சேதத்துடனும், மூழ்கடித்ததென்பது ஜப்பானிய யுத்தத்தில் நமக்கு ஏற்படக்கூடிய வெற்றிக்கு சுபசூசகமாகும். ஆனால் ஜப்பானிய கடற்படை போருக்கு வரவேண்டும்.

காப்டன் பவரின் நாசகாரிகளான சாமாரெஸும், விராகோவும் 1943-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் வடக்கு முனைக்கப்பாலில் ஜெர்மன் யுத்தக் கப்பலான ஷார்ன்ஹார்ஸ்டைத் தாக்கி மூழ்கடித்தன என்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

# ஆகாயத்தின் ரகசிய ஏஜண்டுகள்.

## தென்கிழக்கு ஆசியாவில் லிபரேட்டர்களின் தனிப்பட்ட அலுவல்கள்.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

இவ்வருஷ ஆரம்பத்திலிருந்து 700 தடவைகளுக்குமேல் கிழக்கு விமானப்படை கமாண்டைச் சேர்ந்த ஸ்ட்ராடஜிக் விமானப் படையிலுள்ள தனிப்பட்ட பிரிடிஷ் லிபரேட்டர்கள் வெடிகுண்டுகளன்னியில் எதிரியின் பிரதேசத்திற்குச் சென்றிருக்கின்றன. ஆகிலும் அவைகளில் உயர்தர வெடிகுண்டுகளையும் எரி வெடிகளையும்விட நாசம் விளைவிக்கக்கூடிய சாமான்கள் கொண்டுபோகப்பட்டன. தனியாகச் சென்ற கனமான வெடி விமானங்கள் ஜப்பானியப் படை வரிசைகளுக்குப்பின் சிறிய லக்ஷியங்களில் இறக்குவதற்காக ரகசியமான ஏஜண்டுகளையும் முஸ்தீப்புகளையும் ஏற்றிச் சென்றன.

அவர்களுக்கு அளவற்ற பாராட்டு உரித்ததாகும். ஸ்ட்ராடஜிக் விமானப் படையின் வேலைக்காரர்களுக்கும் நமது பாராட்டு பொருந்தும். அவர்கள் ஒவ்வொரு நாளும் எல்லா பருவகால நிலைமையிலும் மனிதர்களையும், தளவாடங்களையும், குறிப்பான இடத்தில் குறிப்பான டயத்தில் கொண்டுபோய் இறக்கியிருக்கிறார்கள்.

இரண்டு வருஷங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைக்கு பிரிடிஷ் விமானப் படையின் சிறந்த வேலைக்காரர்கள் முன் வந்தார்கள். அவர்கள் தங்களுடைய வேலையை நன்கு அறிவார்கள். தங்களுக்குள் கலந்துகொள்ளாமலேயே அவர்கள் அபாயத்துக்கு உட்படுவார்கள்.

D தினத்துக்கும் பிரான்ஸின் விடுதலைக்கும் முன்னதாகவே இந்த வேலை ஐரோப்பாவில் நடைபெற்றது. அங்கு லேசான விமானங்கள் மாக்விப் படைகளுக்கு மனிதர்களையும் முஸ்தீப்புகளையும் எடுத்துச் சென்றன. தென்கிழக்கு ஆசியாவில் வெகுதூரம் செல்லுவதற்காக பிரிடிஷ் விமானப்படை பெரிய, கனமான விமானங்களான லிபரேடர், டாகோடா விமானங்களை அனுப்பிற்று. அவைகள் ஒரு குறிப்பான இடத்தை வட்டாரமிட்டு, காட்டில் உள்ள ஒரு மத்திய பிரதேசத்தில் சாமான்களைத் தள்ளின. லிபரேடர் விமானங்களில் குடைகளுக்காக விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வால் பக்கம் சிறிய கோபுரம் உள்ள இடத்தில் குடைகள் அமைக்கப்பட்டிருந்தன. முதலில் சாமான்கள் தள்ளிவிடப்பட்டபின் மனிதர்கள் குடைகள் மூலம் சுலபமாகக் கீழே இறங்குவார்கள்.

இந்த நடவடிக்கையின் பிற்பகுதிகளில் பிரிடிஷ் விமானப்படை அநேக பிரிடிஷ் ஆபீஸர்களையும், பர்மிய கொரில்லாப் படைகளையும் இறக்கியபின், லக்ஷியமுள்ள ஸ்தானங்கள் விமானத்திலிருந்து புலப்படும்படியாக மட்டும் வெளிச்ச மூலமாகத் தெரிவிக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் லக்ஷியங்கள் ஒரு தேச படத்தில்தான் நுட்பமாக குறிக்கப்பட்டிருந்தன.

பிரதேசத் தேவைக்கு ஒத்தவாறு இந்த ஸ்தானங்கள் குறிக்கப்படவேண்டும். சில சமயங்களில் விமானிகள் 4,000 அடி உயரமுள்ள குன்றின்பேரிலோ அல்லது மலைச்சரிவில் காடுகளுக்கு மத்தியிலுள்ள ஒரு சிறிய வெளியிலோ சாமான்களை இறக்கும்படி அனுப்பப்பட்டார்கள். எல்லா பிரதேசமும் ஒரே மாதிரியாகக் காணப்படும் அடர்த்தியான காடுகள் உள்ள நூற்றுக்கணக்கான சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தில் பிரயாணம் செய்திருந்தால்தான், பிரிடிஷ் விமானப்படை மேற்கொண்ட வேலையின் இயல்பு நன்கு புலப்படும்.

பர்மாவின் இறுதி விடுதலைக்கான ஆயத்தத்தின் பெரும் பாகம் 1944-ம் வருஷம் வேனிர் கால பருவ காலத்தில் நடைபெற்றது. விமானிகள் மின்சாரமுள்ள சூறுவளிக் காற்றில் சமுத்திரத்தில் கார்க்குகள் இங்குமங்கும் தள்ளப்படுவதுபோல தள்ளாடிச் சென்று வேலையை முடித்துவந்தார்கள். அவைகள் 500 அடிக்குக் கீழ் அநேக பணி நேரம் பறந்து சென்று, பள்ளத்தாக்குகளிலும், மூடுபனி, மழை மூலமாகவும், விசாலமான காட்டில் ஒரு நுட்பமான பிரதேசத்தை தேடித் திரிந்தன.

அவர்களிடம் ஒரு எண்ணம்தான் குடிகொண்டிருந்தது. பீரங்கிகள், ஒலிபெருக்கும் கருவி, உணவுப்பொருள்கள், ஆடைகளைவிட மனிதர்களை தகுந்த இடங்களில் இறக்கிவிடுவதில் தான் அவர்களுக்கு மிகுந்த கவலை. ஒரு நூறு கெஜம் தள்ளி மனிதர்கள் இறங்கினால் அவர்களுக்கு மரணம்தான் ஏற்படும்.

மிகுந்த குறிப்பு அவசியமென்பதற்கு ஒரு உதாரணம் கூறுவோம். ஒரு விமானி மனிதர்களை ஒரு பள்ளத்தை நோக்கியுள்ள மலைச்சரிவில் இறக்கும்படி அனுப்பப்பட்டான்.

லிபரேடர் ஸ்தலத்தைக் குறிப்பாக அறிவதற்காக வட்டமிட்டுக்கொண்டிருந்தபொழுது நூறு கெஜங்களுக்கப்பாலில் எதிர்த்தாற்போலுள்ள மலைக் குன்றில் ஆட்கள் தென்பட்டார்கள். அவர்கள் ஜப்பானிய ஸோல்ஜர்கள் விஷயத்தை அறிந்துகொண்டு ஒன்றும் செய்யக் கூடாமல் அவர்கள் துப்பாக்கிகளை மட்டும் பிரயோகம் செய்துவந்தார்கள்.

இந்த சேவை நிருதியாக நடைபெற்றபோதிலும், பிற்பாதியில் இந்த நடவடிக்கை பகலிலும், சந்திர வெளிச்சத்திலும், நடைபெற்றபோதிலும் ஜப்பானியர்கள் ஒரு தடவையாவது விமானங்களை வழி மறிக்கவில்லை. இந்த நடவடிச்கைகள் பத்திரத்தை உத்தேசித்து எவ்விதம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தனவென்பதற்கு இது தகுந்த புகழுரையாகும்.

நஷ்டங்களும் ஏற்பட்டன. தேச படமில்லாமலும் அல்லது தவறாக தேசபடமுள்ளதுமான பிரதேசத்திலும், கெட்ட கால நிலைமையுள்ளபொழுதும் விமானம் செல்லுவதென்றால் ஆபத்துகள் ஏற்படுவது சகஜம்தான். ஆகிலும் லாடங்களுடன் நஷ்டங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நஷ்டங்கள் அற்பமானவையென்றுதான் சொல்லவேண்டும்.

விமானிகள் பிரயாணிகளை இறக்கிவிட்டுத் திரும்பி தளங்களுக்கு வந்தவுடன் அவர்களின் வேலை பூர்த்தியாகிவிடும். ஆகிலும் இறங்கியவர்களின் வேலை அப்பொழுதுதான் துவக்கமாகும். இதை விமானிகளும் அறிவார்கள். என்ன நேர்ந்ததென்று அறிய விமானி ஆசைப்படுவான். ஒரு தகவலை வெளியிடுவோம். "ஒரு இடத்திலிருந்து ஆட்கள் வெற்றிகரமாக இறங்கினார்கள். சரியான இடத்தில் இறங்கினோம். நாங்கள் வேலையைத் துவக்கிவிட்டோம் என்ற செய்தி கேட்டதும் எங்களுக்கு சந்தோஷம் உண்டாகிற்று."

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 252 (5-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18- 6-45 | மலைக்குடிப்பட்டி | ... மாலை | 7.00 | 21- 6-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 | ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 7.30 |
| 19- 6-45 | குழிபிறை | ... ,, | 7.00 | 22- 6-45 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 | ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| 20- 6-45 | பனையப்பட்டி | ... ,, | 7.00 | 23- 6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 | 24- 6-45 | பூவரசகுடி | ... ,, | 7.00 |
| | | | | ,, | வேங்கடக்குளம் | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 253 (6-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 25- 6-45 | அரிமளம் | ... மாலை | 7.00 | 28- 6-45 | மெய்கோல்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 | ,, | திருவரங்குளம் | ... ,, | 7.30 |
| 26- 6-45 | பெருங்களூர் | ... ,, | 7.00 | 29- 6-45 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 | ,, | கிள்ளுகோட்டை | ... ,, | 7.30 |
| 27- 6-45 | குளவாய்ப்பட்டி | ... ,, | 7.00 | 30- 6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| ,, | கீரையூர் | ... ,, | 7.30 | 1- 7-45 | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| | | | | ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 19— 6—45 | கோனாபட்டு. | 26— 6—45 | வடகாடு. |
| 20— 6—45 | கீழாநிலை-புதுப்பட்டி. | 27— 6—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 21— 6—45 | ஆலங்குடி. | 28— 6—45 | ஆலங்குடி. |
| 22— 6—45 | புதுக்கோட்டை. | 29— 6—45 | புதுக்கோட்டை. |
| 23— 6—45 | பொன்னமராவதி. | 30— 6—45 | திருமயம். |
| 24— 6—45 | தீத்தான்விடுதி. | 1— 7—45 | தீத்தான்விடுதி. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் ஸூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—18-6-45.